களுக்கு பயிற்சிமுறை

அநேகர் இன்னும் அவர்களுள் 'முஷ்ரிக்'காகவே இருக்கின்றனர். 'முஷ்ரிக்கு'டைய அகங்காரத் தன்மை 'ஷைத்தானி'யாக இருக்கின்றது. அது அவனுடைய ஹிருதயத்திலிருந்து நீங்காதவரை 'ஹக்கு'டைய 'ஹுவியத்'தாகிய 'அவன்' என்னும் படர்க்கைத் தன்மை அதில் தோற்றமளிக்காது.

13-வது அத்தியாயம்

('அத்கார்,' 'அஷ்கால்,' — தியான அப்பியாஸ முறைகள்)

தனிமையில் தானாக தன்னால் செய்யப்படும் 'திக்ரு' 'ஷுக்லால்' அதிக பலனில்லை பலன்தரதக்க கருத்தோர்மித்த ஒரு 'பீரு'டைய செல்வாக்கின் கீழிருந்காலன்றி எண்ணங்கள் ஒர்மிக்காது விருப்பமுடையோரின் விஷயத்தில்தான் 'பீரு'டைய செல்வாக்கு பெரிதும் பலன் தரதக்கதாயிருக்கிறது. 'பனு' உடைய நிலையை அடைந்துவிட்ட 'பீர்' தனது முரீதையும் அவ்வாறே ஆகச் செய்யலாம். ஒரு பஞ்சுப் பொகி பூதக் கண்ணாடியானது இரண்டு வஸ்துக்களுக்கிடையில் குறிக்கிட்டதும் பஞ்சு உடனே தீப்பற்றிக்கொள்கிறது சூரிய வெளிச்சத்தினால் நெருப்புப் பற்றாமல் சதாதரிபட்டிருக்கிறது. 'மாஸிவல்லாஹ்' (அல்லாஹ்வின் 'வேறு') வைப் பார்க்காத வகையில் ஒரு சம்பூர்ண 'பீர்' ஆகிய ஞானி குருடாகத்தானிருக்கிறார். 'மாஸிவல்லாஹ்'வை மட்டும் பார்க்கும் ஒரு முரீதும் குருடனாகவேதானிருக்கிறான் 'ஹக்'கைப் பார்க்காத குருடாக 'பீர்' இருந்தால் அவர் குருடனுக்கு வழி காட்ட முடியாது. 'ஸைர்' இல்லாஹ் அல்லாஹ் அளவில் யாத்திரையை முடித்துக்கொண்டு 'பீர்' ஸைர் பில்லாஹ் (அல்லாஹ்வில் யாத்திரை)யினுள் நுழைகிறார். ஆனால் 'அவர் தனது ஆத்மீகப் பலத்தினால் 'ஸைர் இல்லாஹ்வை' மறுபடியும் 'முரீதுடன்'டன் தொடங்கி முரீதை படிப்படியாக அதன் முடிவான எல்லைக்குக் கொண்டுபோய் சேர்க்கிறார்.

முரீதை தன்னில் மரித்தவனாகவும், ஹக்கில் ஜீவிப்பவனாக வும் செய்கிறார். ஆதம் (அலை) தொடுத்து இது பரியந்தம் ஒரே ஒரு பீர்'தான் யதார்தத்தில் இதனை செய்து முடிக்கிறார். அவர்கள்தான் நபிகட்பிரான் (ஸல்) அவர்களாகும். முரீதை நேர்வழி காட்டிக்கொண்டிருக்கும் 'ஒளலியா' 'அன்பியா'க் களின் பல்வேறு நிலைமைகளிலும் அவர்கள்தானிக்கிறார்கள். 'ஆதம்' (அலை) தொடுத்து 'காத்தமும் ஒளலியா'வான முஹம்மது அலி மஹ்தீவரையிலும்' ஸ்தூல சரீரத்தில் அல்லாஹ் வின் பிரதிநிதியானவர் அவர்களேயாகும் இவ்வாறு குறிப் பிட்டது 'கதைக்' என்னும் அவதார முறையிலன்று; 'புரூஜ்' என்னும் பிரதிபிம்பித்தலின் வகைதான். ஒரு விளக்கிலிருந்து அநேக விளக்குகளை கொளுத்துவது போன்றே எல்லா விளக்கு களிலும் பிரகாசிப்பது ஒரே ஜோதிதான் சம்பூர்ண 'நபித்து'வம் ஒரே சரீரத்தில் தன்னைத் தோற்றுவித்து முஹம்மது (ஸல்) என்னும் பெயரைப்பெற்றது.

முராக்கபா — முஜவ்விர் (முடுதலுக்குரியாதியானம்) 'கிப்லா'வை நோக்கி உட்கார்ந்துகொண்டு அந்தரங்க எச்சரிக் கையைக் காது தாழ்த்திக் கேள் உன்னுடைய இருதயத்தி லிறங்கும் ஒவ்வொரு 'கத்ரா'வான எண்ணத்தையும் அல்லாஹ் வுடைய கட்டளையென்று கருதி அவை உனது தத்துவத்திற்கு உட்பட்டதாயிருந்தால் அவற்றை செயல் நடத்திவிடு; இல்லா விடில் வெறும் எண்ணத்துடன் மட்டும் விட்டுவிடு. (அதாவது நல்ல எண்ணங்களை மட்டும் தொழில்படுத்திவிட்டு மற்றதை வெறும் எண்ணத்தோடு ஒழித்துவிடு)

முராக்கபா — மீம்மீம். முதல் 'மீம்' 'முத்லக்' ஆகிய அகண்டத்தைத்தையும், இரண்டாவது 'மீம்' 'முகையது' ஆகிய கண்டத்தையும் குறிக்கின்றன. அகண்ட பரிபூர்ண மாகிய ஹக்கு (முதல் 'மீம்') 'நுஸூல்' என்னும் படி இறங்க வில் கண்ட ரூ'த்தில் (இரண்டாவது மீம்) வெளியீடா யிருக்கிறது இந்த கண்டம் 'உரூஜ்' என்னும் படி ஏற்றத்தில் அகண்ட பரிபூர்ணமாயிருக்கிறது.

(' அத்கார், ' ' அஷ்கால், ' — தியான அப்பியாஸ முறைகள்)

'நுஸுல் - ஊர்த்து வகமும், அல்லது படி இறங்குதல் உருஜ் - அதோமுகம் அல்லது படி ஏற்றம்)

அஹ்லெ - முகாஷபா வென்னும் திரை நீங்கியவர்கள் தங்கள் கஷ்பின் மூலம் வஹ்தத்தை உணர்ந்தார்களேயன்றி திருஷ்டாந் தங்களினாலன்று. உனது கண்களை மூடிக்கொண்டு வஹ்தத்தை பிரத்தியட்சமாக இருக்கக் காண்பாயாக; உனது கண்களைத் திறந்து பிரத்தியட்சமான வஹ்தாத்தாகிய) ஒன்றில் பலதைப் பார்ப்பாயாக வஹ்தத்து என்னும் ஏகம் தாத்தைச் சார்ந்தது; 'கத்ரத்து' என்னும் அநேகம் ஸிபாத்தைச் சேர்ந்தது தாத்தைப் பொருத்தவரை அவன் முந்திய முந்தின வனாகவும், சிபாத்தைப் பொறுத்தவரை '' அவனே பிந்திய பிந்தினவனுமிருக்கிறான் அதியாக இருப்பதில் தாத்து பாத்தினாயும் அந்தமாக இருப்பதில் சிபாத்து 'ளாஹி'ராயு மிருக்கிறது அவனே முந்தியவனும். பிந்தியவனும் வெளி யீடானவனும், உள்ளீடானவனுமாயிருக்கிறான் '' 'ஹுவல் அவ்வலு வல்ஆகிறு. வள்ளாஹிறு. வல்பாதினு ''

உனது கண்களையும். காதுகளையும் பொத்திக் கொண்டால் உனது சரீரமும். பிரபஞ்சமும் உன்னிடமிருந்து மறைந்துவிடும்; எனினும், உனது 'நான்' என்னும் தன்மை மட்டும் உனது அறிவில் தரிபட்டிருக்கும் அது மறையாத அளவுக்கு உனது நோட்டத்தை அதன் மீது செலுத்து இவ்வாறு செய்யத் தொடங்கு முன்னர் மனித சஞ்சாரமற்ற ஓர் மூலையைத் தேடியடைந்து மனித சாவகாஸத்தைவிட்டும் நீங்கிக்கொள். 'இந்த ஷுக்லு' ஆகிய அப்பியாஸம் உனது மனதை ஓர் மிக்கச் செய்து உன்னால் இழக்கப்பட்ட உனது சுயத்தை உனக்குக் கிடைக்கச் செய்யும்.

வஸ்துக்களின் தன்மையின் மீதே ஷரீஅத்துடைய சட்ட திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன வஸ்துக்களின் தன்மை தாத்துடைய பண்பு (சிபாத்து)களின் மீதே ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது இந்த சுபாவத்தன்மையை ஒருவன் கடந்து விட்டானேயாகில் அவன் அகமியத்தை அடையப்பெறுகிறான்.

வஸ்துக்களுடைய தன்மையின் உண்மை அவன் மீது உதயமாகிறது. 'அல்லாஹும்ம அறினீஹகாயயிகல் அஷ்யா அகமாஹியா' — "நாயனே! எனக்கு வஸ்துக்களை உள்ளா உள்ளபடியாக (அதன் அகமியங்களை) அறிவித்துத்தா" — என்று நாயம் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்திருக்கிறார்கள். தன்மையிலிருந்து அகமியத்தளவிலும், அகமியத்லிருந்து மெய்ப்பொருள் (ஹக்கு) அளவிலும் யாத்திரை செய். ஹக்குடன் யாத்திரை செய்தல் (ஸைர்ம அல்லாஹ்) இதுவே; பின்னர் முடிவற்ற ஹக்கில் யாத்திரை செய்தலாகிய ஸைர் பில்லாஹ்வைப் பெறுகிறாய்.

ஹிருதயங்கள் பல்வேறு முறையான வடிவங்களில் அமைக்கப்பட்டிருக்கிறன எனவேதான் பல்வேறு விதமான பலப்பலன்கள் அவற்றினின்றும் வெளிப்படுகின்றன மனிதனுடைய அகமியம் அவ்வாறே (ஹகீகத்தி) ல் ஹக்குடைய அகமியமாகும் பேசும் சக்தி ஒன்றே; புல்லாங்குழல், வீணை, சிதார் ஆகிய பல்வேறு வாத்திய கருவிகளில் அமைப்புக்குத் தக்கவாறு பல்வேறு தொனிகளுண்டாயிருக்கின்றன

சகல சரீரங்களிலும் பேசுபவன் நீயே என்று கருதிக் கொள்வாயாக தொனியிலும், பேச்சிலுமுள்ள பேதங்கங்கள் சரீரங்களிலுள்ள பேசா பேதங்களைப் பொறுத்தே சகலவிடங்களிலும் பேசுபவன் நீயே இப்பொழுது சரீரங்களை நீக்கிவிடு. நீ ஒரு பேச்சற்ற பேச்சாகப் பேசுகிறாய். அதுதான் உனது பேச்சுனுடைய அகமியம் 'ஜம்உல்ஜம்உ' நிலையிலுள்ள 'கலாம் — தாத்தி' அதுவே வார்த்தைகளாலும் சப்தங்களாலும், சமைக்கப்பட்ட வகையான (ஜுஸ்இ) பேச்சு இப்பொழுது மறைந்ததும் 'கலாம்' ஆகிய பேச்சு இருவகைப் படும்: — ஒன்று 'ஜம்உ'டைய நிலையிலுள்ள 'கலாமி-தாத்தியும்' மற்றொன்று பர்குடைய நிலையிலுள்ள 'கால-தப்ஸிலி'யுமாகும்; ஒன்று தொனியற்றது: மற்றொன்று தொனிகளும், வார்த்தைகளுடையது மற்றொன்று தொனிகளும், வார்த்தைகளுடையது தொனிகளற்ற 'ஜம்உல்ஜம்உ'டைய நிலையிலிருந்து ஹக்குடைய வார்த்தை அல்லது வசனமாகிய (குர்ஆன்) இறங்கினது ஒன்று மஞூரிபான அர்த்தத்தை பொதிந்தது; மற்றொன்று குராத்

(' அத்கார், ' ' அஷ்கால், ' — தியான அப்பியாஸ முறைகள்)

தாகிய கோலத்தைப் பெற்றது கலாமீ-தாத்தியானது தன்னை கலாம் - தப்ஸீலியாகவேயன்றி வெளிப்படுத்திக் கொள்ள முடியாது. இப்போது உனக்கு 'கைர்' என்றும் வேறு இல்லை என்பதை அறிகிருய். இந்த வேற்றுமை பல்வேறு சரீரங் களிலிருந்து அவற்றின் ஆதாயங்களுடன் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு தடவை எனது ' பீர் ' சொன்னதாவது: — ஹக் குடைய திருநாமங்களிலொன்றை நான் ஜெபித்துக்கொண்டு எனது அறையிலிருந்தேன் எனது சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் அந்த பெயரை ஜெபிக்கவேண்டுமென்று நான் நாடினேன். அப்பொழுது வொவ்வொரு உருப்பும் எனது சொந்த பெயரையே சொல்லக் கேட்டேன். நான் இதனை எனது 'பீரு'க்குத் தெரிவித்தேன். அவர்கள் அதற்கு நான் எதிர்ப்பார்த்ததைவிட இதுவே சிறந்தது என்று என்னிடம் சொன்னார்கள் "பக்குருனீ அத்குருகும்" எனவே என்னை நினைப்பீர்களாக, நான் உங்களையும் நினைப்பேன். " ஜெபித்தல் மறைந்ததும் ஜெபிக்கிறவன் ஜோதியாக ஆகிருன். உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை அவன் ஜெபிக்கப்பட்டவனுகின்ருன் " இது போன்றே உனது அறையின் சுவர்களும். அந்த பெயரையே ஜெபிக்கக்கூடும் இங்கு நீகுர்பு பராயிலையும். குர்பு — நவாபிலையும், அடைகிருய் இதுவே திக்று — சிபாத்தீ திக்று தாத்தீயை பொறுத்த வகையில் அனல்ஹக்குடைய நிலைமையிலுள்ள தனது 'கல்பி'லிருந்து 'நான்' 'நான்' என்று தொனிப்பதை அவன் கேட்கிருன்.

சில ஆரிபீன்கள் திக்று சிபாத்தியைத்தான் பழகுகின்ற னர்; ஏனெனில், திக்று — தாத்தி இதன் பின் அமைந்திருக் கிறது. திக்று — சிபாத்தியானது திக்று — தாத்தியை அடைவதற்குள்ள ஓர் ஏணியாகயிருக்கிறது. அங்கு ' நான் ' என்பதைத்தவிர யாதொன்றுமில்லை. 'தாத்துடைய தஜல்லியை' 'சாலிக்கு' அடையாவரை அவன் அவனே ஹக் என்றும் அவனுக்கே புகழ் என்றும், கூறுகின்ருன்; அந்த நிலையை அவன் அடைந்துவிட்டதும் அவன் நானே ஹக்கு (அனல் ஹக்கு) என்று சொல்கிருன். ஹக்குடைய அறிவு 'சூபி' யுடைய

அறிவில் மறைந்துவிடுகிறது. சாதாரண ஜனங்கள் இதனை எவ்வாறு உணர்ந்துகொள்வர். " (மத்னவீ) இங்கு 'சூபி' தரிபடுத்தப்பட்டும், அவருடைய 'கைர்' ஆகிய வேறு இன்மை யாக்கப்பட்டும்விடுகிறது; அதாவது ஹக்குடைய அறிவு 'ஆரிபு' டைய உலூஹிய்யத்தை இன்மையாக்கின்றது. ஹக்குதானாக இருக்குபொழுது 'கைர்' என்பது கிடையாது.

14-வது அத்தியாயம்

(கத்ராத் — மனதின் ஊசாட்டங்கள்)

உலக சம்பந்தப்பட்டோ அல்லது சாலிக் ஆகிய முமூட்சுவின் 'நப்ஸு' ஆகிய தன்மையைப் பொருத்தோ இவ்விரண்டிலும் எதுவாயினுஞ்சரி மாஸிவல்லாஹ் (அல்லாஹ் அல்லாதது)வின் உணர்ச்சியை இன்மையாக்குவதே 'பனா' என்பதாகும். 'பனா' நிலையில் 'சாலிக்கு' இன்மையாக்கினேம் என்ற நினைப்பை மட்டும் சதா பெற்றிக்கிறார். அந்த அறிவும் இன்மையாக்கப்பட்டதும் அது 'பனாவுல் பனா' (இன்மையில் இன்மை)வாக ஆய்விடுகிறது. இன்மையில் இன்மைக்குப் பொருள் தரிபடுத்தல் என்பதாகும். எனவே, அது 'பகா' வென்னும் தரிபாடாக ஆகிறது. 'இன்னீ அனல்லாஹ்' — கிடனாக நானே அல்லாஹ்வாகும்; தன்னை அறிகலே அல்லாஹ்வை அறிகலாகும். "குல்லு மன் அலைஹா பானின் வயப்கா வஜ்ஹுரப்பிக துல்ஜலாலீ வல்இக்ராம்" — அதன் மீதுள்ள ஒவ்வொன்றும் இன்மையாக வேண்டியதே; வலுப்பமும், கன்னியமுந்தங்கிய உனது இரட்சகனின் முகம் மட்டும் சதா தரிபடாயிருக்கும்."

மாஸிவல்லாஹ் (அல்லாஹ் அல்லாதது) உன்னை கவர்ந்துகொள்ளாமலிருக்க 'கத்ராத்' வென்னும் மன ஊசாட்டங்களை நோட்டமிட்டு கவனித்து வருவதைக் காட்டினும் மேலானதும் பலன் தரதக்கதுமான வணக்கம் யாதொன்றுமில்லை. ஒரு ஹதீதுபடி:— "சரீரத்தில் ஒரு துண்டு இறைச்சி இருக்கிறது.

தியான அப்பியாஸ முறைகள்)
(' அத்கார், ' ' அஷ்கால், ' —

அது பரிசுத்தமடைந்தால் முழு சரீரமும் பரிசுத்தமடைகிறது
அது சீர்கெட்டால் பூராசரீரமும் கெட்டுவிடுகிறது " ஹிருதய
மாகிறது அரசனும் மற்ற அவயவங்கள் அதன் பிரஜைகளுமா
யிருக்கும். அரசன் நேர்மையாக நடத்தப்பட்டால் சரீர
அவயவங்களான பிரஜைகளும் நேர்மையாக நடத்தப்படும்.
எனவே, அல்லாஹ்வைத் தேடுபவன் ' கத்ராத் 'வாகிய
மன ஊசாட்டங்களை ஒழித்து தனதுஹிருதயத்தைசுத்தப்படுத்தி
னால் பிரஜைகளாகிய சரீர அவயவங்கள் சீர்படும் உலமாவாகிய
பரோட்சஞானி ஹிருதயத்தை சுத்தப்படுத்தும் நோக்கங்
கொண்டு முதன் முதலில் சரீரத்தைச் சீர்படுத்த முயலுகிறார்.
இதுவோ நீண்டதோர் முறை தீர்க்கதரிகள் ஹிருதயத்தையே
முதலில் நோட்டமிடுவது கொண்டு மனக் கண்ணைத் திறக்
கிறார்கள்.

அல்லாஹ்வின் 'தஜல்லி'யாகிய பிரதிபிம்பத் தோற்றம்
எதிர்ப்பாராமல் ஹிருதயத்தில் உதயமாகிறது. ஆனால் அதற்கு
தயாரிலிருப்போரின் இதயத்தில் மட்டும்தான் அது உதய
மாகிறது.

ஒரு அப்து ஆகிய அடிமையைத் தனது 'றப்' ஆகிய
நாயனை உணரச் செய்யும் ' கதராத் ' வாகிய ஊசாட்டமே
' ஜிப்ரயீல் ' ஆகும் ரூஹா - முஹம்மதியின் வழியாக
இறை வசனம் உலூஹிய்யத்து என்னும் நாயகத் தன்மையி
லிருந்து ஜிப்ரயீலுக்கு இறங்கி வருகிறது. அங்கிருந்து
பின்னர். முஹம்மது (ஸல்) அவர்களுடைய சரீரத்துக்கு
இறங்குகிறது. முஹம்மதுடைய ஹகீகத்து முஹம்மதுடைய
மனதினிடம் பேசுகிறது அது (முஹம்மதுடைய மனது)
முஹம்மதுடைய சரீரத்திடம் பேசுகிறது இறைவனது வசனம்
முதலில் வஹீ (தூது)யாகவும், பின்னர் 'இல்ஹாம்' என்னும்
உதிப்பாகவும், அதன் பின்னர் 'கதரா' (மலகானி, நப்ஸானி
ஷைத்தானீயாகிய ஊசாட்டங்கள்) வாகவுமிருக்கும், இவை
யாவும் இறை வசனத்தின் தஜல்லியாத்து என்னும் தோற்றங்
களாகும்.

அஸ்ராரே அனல்ஹக்

எதெது உன்னை அல்லாஹ்வின்பால் இழுத்துச் செல்கின்றதோ அது மார்க்கம்; எதெது அல்லாஹ்வை யடையும் பாதையில் குறுக்கிட்டு நின்கின்றதோ அதுவே உலகம்.

நப்ஸை அழிச்சாட்டியம் செய்தவன் யாரெனில் இம்மைக்காகவும், மறுமைக்காகவும் வேண்டி இறைவனை வணங்கியவனேயாகும். அன்லாஇலாஹஇல்லாஅந்தசுபுஹானக இன்னீ குந்து மினல்ளாலிமீன்'' — நிட்சயமாக அதிதூய்மை யான உன்னையன்றி நாயன் யாருமில்லை. திடனாக நாங்கள் 'லாளிம்'களின் கூட்டத்திலுள்ளவர்கள் (ஒரு வஸ்துவை அதன் சுய இடத்தைவிட்டும் வேறிடத்தில் மாற்றுபவனே லாளிம்) ஷிர்க்கு என்னும் இணைவைத்தலைவிட்டும் நீங்கியிருக்க அல்லாஹ்வை அல்லாவுக்காக நினைப்பாயாக, திக்று என்னும் தியானத்தை விட்டுவிடாதே; ஏனெனில், சரீர இச்சைகளைத் தொலைப்பதற்கு உன்னால் முடியாதுபோய்விடும் 'திக்று' என்னும் தியானத்தின் ஆசி மூலமாக நீ இறைவனை அடைந்து விடலாம் நண்பனின் தேட்டத்திலேயே சதா ஈடுபட்டிரு. பகை வனுக்காக வேண்டி உனது நண்பன் மீதுள்ள தேட்டத்தைக் கைவிடாதே. ஷெய்குஷாஹ வஜஹுத்தின் அவர்களுடைய சீடர்கள் தங்கள் மனதின் சலனத்தைப் போக்கிக்கொள்ள முடியா திருந்தார்கள். எனவே அவர்கள்எவ்வாறு'திக்று'ஆகியதியானம் செய்ய முடியும்? ஷெய்கு அவர்கள் கூறியதாவது:- ''ஷைத்தா னுடைய வேலையோ உங்கள் மனதின் அமைதியைக் குலைப்ப தாகும். உங்கள் வேலையோ அந்த மனதை ஒர் மிக்கச் செய்த லாகும் 'கன்னாஸ்' ஆகிய 'ஷைத்தான்' உங்கள் எண்ணங்களை சிதறடிக்கிறான் என்று கூறப்பட்டிருக்கிறது. 'யுவஸ்விஸு பீஸுதூரின்னாஸ்.' மேலும், ஜின்னையும், மனிதனையும், என்னை வணங்கவேயொழிய நான் படைக்க வில்லை' — வமாகலக்துல் ஜின்ன வல்இன்ஸ இல்லா லியஃ புதூன், என்றும் கூறப்பட்டிருக்கிறது. எனவே வணக்கத்தில் உனது எண்ணங்களைச் சிதறவிடாதே

அல்கவாதிர் ரசூலுல்ஹக்கு — ஒவ்வொரு 'கதரா' வாகிய மன ஊசாட்டமும் 'ஹக்குடைய' தூதராயிருக்கிறது.

(கத்ராத் — மனதின் ஊசாட்டங்கள்)

'ஜலாலி'யாயினும், ஜமாலியாயினும் ஒவ்வொரு 'கதரா'வும் இறைவனின் தீர்க்க தரசியாயிருக்கும் ஆனால் 'சாலிக்' தனது புலனுதிகளின் உணர்ச்சியைப் பெற்றிருக்கும் பரியந்தம் அவன் 'ஷரிஅத்து'டைய எல்லையை கிஞ்சிற்றும் கடக்கக் கூடாது எத்தகைய அமிதத் தன்மையைவிட்டும் அவன் விலகிக்கொள்ள வேண்டும். "எவ்விடத்திலும் இறைவனையே செயல் கர்த்தாவாகக் காண்பாயாக;

ஆனால் எல்லைகளை மட்டும் கடந்துவிடாதிருப்பாயாக. (குல்ஷன்ராஜ்) ஏனெனில் 'ஷரீஅத்து'க்கு முரண் செய்வது கொடிய விஷமாகும். அது மனதை மரிக்கச் செய்து அந்தகாரத்தில் ஆழ்த்திவிடுகிறது.

அமீருல் முஃமினீன் ஹஜ்ரத் அலி (கர்) அவர்கள் கூறியிருப்பதாவது:—

உன்னிலேயே உனக்கு மருக்கிருக்கிறது நீ பார்ப்பதில்லை உன்னில் நின்றும் உனக்கு வியாகி ஏற்படுகிறது நீ நோட்டமிடுவதில்லை." கண்டிப்புகளின் நிமித்தம் நீ அற்பமாக இருக்கிறாய். உன்னிலேயே யாவற்றையும், எல்லாவற்றிலும் உன்னையும் வகை வகையாக நீ காண்பாயாக உனக்கு எது வேண்டினும் உன்னிடத்திலேயே இச்சித்துக் கொள்.

உதிப்பின் வாயிலாய் 'கதரா' வென்னும் எண்ணங்கள் மனதில் வருகின்றனவே யன்றி 'ஆலம்முல்க்குக் சொந்தமான இந்திரியங்களின் மூலமாயன்று அவைகள் நல்லதாயினும், கெட்டதாயினும் இந்திரியங்களிருக்கவே அவைகள் ஆலம் — மலகூத்திலிருந்து வருகின்றன. புலனுதிகள் மூலமாகத்தான் உலக சம்பந்தப்பட்ட அறிவு உண்டாகிறது ஆலம் மலகூத்திலிருந்து வருவது எதெனில் அது மரணத்தின் பின்னர் நினைப்பின் உதவியின்றியும், கனவிலிருப்பதுபோல் கற்பனை சக்தியின் வாயிலாகவும் மணக்கண் வழியாக இறங்குகின்றது சாதாரண மனிதர்களுக்கு அனிச்சை மரணத்திற்குப் பின்னர் கதரா'வாகிய எண்ணங்கள் விருப்பம் அல்லது இச்சையுடன்

ஏற்படுகின்றன. மரணத்திற்கு முன்னர் மரித்துவிடுவோருடைய நிலைமையும் இவ்வாறேயாம் 'மூத்தூகப்ல அன்தமூதூ' — மரணத்தின் முன்னர் மரித்துவிடு, என்பது நாயக வாக்கியம் ஆதலின் பின்சொல்லப்பட்டவர்களுக்கு 'முஜா ஹதா' (பெரும் பிரயாசையுடன் கூடிய தெண்டியு' இன்றியமையாதது. ஏனெனில் ஜீவியத்திலேயே ஒருவன் மரணத்தை அடையப் பெறுகின்ருன், எதனை மற்றவர்கள் மரணத்தின் பின்னர் அனுபவித்து இல்முயகீன் (பரோட்சஞானம்) மூலம் 'ஐனுல்யகீன்' ஆகிய அபரோச ஞானத்தை அடைகிருர்களோ அதனை இவர் ஜீவியத்திலேயே அனுபவிக்கிருர் தீர்க்கதரிசிகளும். ஒளலியாக்களும் தங்கள் வாழ்நாளிலேயே இந்த அனுபங்களை அடையப் பெருகிருர்கள். (அதாவது) அவர்கள் விழிப்பிலேயே இந்த ஜீவியத்தில் ஆலம் அர்வாஹு ஆகிய ஆன்மலோகம். ஆலம்மிதால் ஆகிய சூட்சும லோகம் ஆகியவற்றினை நேரிட்டு அறிகிருர்கள்.

ஹுவல் அவ்வலு. வல் ஆகிறு. வல்ளாஹிறு. வல் பாதினு'' — அவனே முந்தியவனும். பிந்தியவனும். வெளி யீடானவனும், உள்ளீடானவனுமாகும். அவன் அவ்வா றிருக்கையில் வஸ்து அல்லது பிறவற்றின் இருப்புக்கோ வெளிப்பரையிலும். உள்ளீட்டிலும் இடமே கிடையாது. அலா இன்னஹு பிகுல்லிஷைஇன் முஹீத்' — திட்டமாக அவன் சகல வஸ்துக்களையும் சூழ்ந்திருக்கிருன்'' அதாவது வெளிப் படை வஸ்துக்களையும் நினைப்பிலான வஸ்துக்களையும் சூழ்ந் திருக்கிருன் அவனுடைய ஆகியே அந்தமும், அந்தமே ஆதியாயுமிருக்கிறது; அவனின் வெளியீடே உள்ளீடும். உள்ளீடே வெளியீடுமாயிருக்கிறது அவனிடத்தில் மாறுந் தன்மைக்கு இடமேதுங் கிடையாது.

'கதரா' வென்னும் ஊசாட்டம் அல்லது எண்ணம் 'கைர்' யென்னும் 'வேறு' ஹங்கிடமிருந்து வருவதாகும். அதனை சுட்டக் கூடாது. அல்லது பிறப்பொருளின்பால் எதற்காயினுஞ்சரி 'கத்ரா' வென்னும் நன்மைக்கோ தீமைக்கோ வார்த்தையின் பிரகாசத் எண்ணங்கள் ஹக்குடைய

தோற்றங்களே. " அல்கவாதிர் றசூலுல் ஹக்கி பயஸ்த ஜிப்லஹா " கதராக்கள் இறைவனின் தூதர்களாகும்; எனவே அவற்றை நீங்கள் அங்கீகரியுங்கள்.

ஷைத்தானீ அல்லது நப்ஸானீ கதராவானது உனது இதயத்தில் உதிக்கும்பொழுது அதனை ஹக்குடைய கட்டளை யென்று அங்கீகரித்து அறிவிலும். கற்பனையிலும் மட்டும் அதற்குக் கீழ்படிந்துக்கொள். 'றஹ்மானி' அல்லது 'மலகீ' 'கதரா' உதிக்கும் வேளை அதனை உள்ளபடி செயல் நடத்து; ஏனெனில், அது உன்னை இறைவன்பால் சமீபிக்கச் செய்கிறது. இவ்வாறே சூபி தனது நோட்டத்தை கதராவின் மீது சதா செலுத்தி வருகிறார். அவர் ஹிருதயத்தின் காரியங் களை மறந்தவராயிருப்பதில்லை. இந்த வகையில் 'ஷுத்தாரி யாக்கள்' மிகுந்த கவனஞ் செலுத்தி எல்லா கத்ராக்களையும் இந்த மூலஸ்தானத்தினின்றும் வருவதாகக் காண்கிறார்கள்.

'வஹ்தத்தா'கிய ஏகத்தன்மையில் 'கத்ரத்தாகிய' அநேகத் தன்மையை அடக்கிவிடமுடியாது 'வஹ்தத்து' ஆகிய ஏகத் தன்மையை அடைவதற்கு 'கத்ரத்தாகிய' அநேகத் தன்மையை ஒழித்துவிடவேண்டும் 'அஹமதுடைய' 'மீம்' 'அஹது' என்பதிலே ஒழிக்கப்பட்டுவிடுகிறது நாயமவர் களின் தோழர்கள் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து "நபியே! நீங்கள் அஹதுவா?" என்றதற்கு நாயகமவர்கள், "இல்லை நான் மீமின்றிய அஹ்மதுவாயிருக்கும்" என்று பதிலுரைத் தார்கள். 'அஹதிய்யத்துடைய' 'தஜல்லியிலேயே' 'மீம்' இன்கையாக்கப்பட்டது " மன்றஆனீ பகத்ரா அல்ஹக்கு " — யார் என்னைக் கண்டானோ நிட்சயமாக அவன் ஹக்கைக் கண்டான்!

வஹ்தத்தில் 'கைறு' என்னும் வேறு இல்லாதிருக்கும் பொழுது நீவணக்கத்தில்எவ்வாறு 'கைர்' என்பதைக் காண முடிந்தது 'கைர்' என்பது இருக்கும்வரை வணக்கத்தில் நய வஞ்சகம் உடாகும்.

தாழ்மையான வஸ்துக்களில் நீ அவனைக் காண்பதில்லை. அவனுடைய மகிமையே உன் முன்னால் ஒரு திரையாக நிற்கிறது மாபெரும் அலக்ஸாந்தர் ஒரு சுமை தூக்கியுடைய ஆடையை தரிக்கும் வேளையில் யாரும் அவரை விளங்கிக் கொள்ளமுடியாது. அவனுடைய அடிமைத் தன்மையே அவனை மறைக்கும் ஒரு திரையாக இருக்கிறது.

ஒரு பாவம் நிகழ்ந்திட்டபோது அதனை ஹக்குடைய கட்டளையென்றும், அதனை நிகழ்த்தப்பட ஒருவனை நியமிக்கப் பட்டிருக்கிறதென்றும் கருதுவாயாக; பின்னர் அதன் கெடுதலை விட்டும் ஹக்கிடம் காவல் தேடிக்கொள்: அது ஆண்டவனின் கட்டளை; 'களா' கத்ரை புறக்கணித்துவிடாதே உன்னை ஒரு செயலின் கருவியென்று கருதிக்கொள் 'தௌஹீது - பில்அப்ஆல்' என்ற செயலில் தௌஹீதை சதா கவனித்தில் வை: உன்னையும், உனது செயல்களையும் புறக்கணித்து விடு. நன்மையாயினும். தீமையாயினும் ஒவ்வொரு செயலும் மெய் யான செயல்கர்த்தாவினிடமிருந்து நிகழ்கிறது அவனே முத்தலக்கான ஹக்கு அவனது எண்ணற்ற பண்புகளின் ஒரு பண்பின் பலன் அல்லது ஆதேயமாகிய முடிவே ஒரு செயலாகும். 'பண்பு' 'தாத்து' ஆகிய 'தத்சொரூபத்துக்கு ஐக்கியப்பட்டது செயலிலிருந்து பண்பு அளவிலும். பண்பி லிருந்து தாத்து ஆகிய சத்சொரூப அளவிலும் செல்வாயாக. இவ்வுலகில் நடக்கும் உனது ஒவ்வொரு செயலும் அவனுடைய செயல், பண்பு, அல்லது தாத்து ஆகியவற்றின் தோற்றம். இந்த தோற்றங்களிலே நீ உன்னை கரையச்செய்து கொள்வாயாக இக்கொள்கையினரின் தலைவரான ஜுனைது (றலி) அவர்கள் 'மஃரிபத்து' நான்கு நிலைமைகளைப் பெறும் என்று கூறியிருக்கிறார்கள் நன்மையோ, தீமையோ, சாலிக் கினிடமிருந்தோ, அன்றி உலகனிடமிருந்தோ நிகழும் ஒவ் வொரு செயலையும், அசைவையும், உண்மையான செயல் கர்த்தாவிடமிருந்து தான் உண்டாகிறது என்று கருது. யாதொரு செயலும், பண்பும், தாத்தும், தனக்கு சொந்தமா யில்லாத கண்டிப்பான செயல்கர்த்தாவிடமிருந்து இச்செயல் களை நீக்கி தாத்துடைய செயல் என்று கருது. சம்பூர்ணத்தின்

(கத்ராத் — மனதின் ஊசாட்டங்கள்)

செயல்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடிதான்,
தாத்து, பண்பு, செயல்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடிதான், செயலிலிருந்து பண்பள
கண்டிப்பு ஆகும். இரண்டாவதாக, செயலிலிருந்து பண்பள
வில் செல்வாயாக; ஏனெனின் ஒரு பண்பிலிருந்து நிகழாத
யாதொரு செயலுமிருக்க முடியாது. மூன்ருவதாக, ஒவ்வொரு
கத்ராவையும் ஹக்குடைய கட்டளையாகக் கருது அது ஒரு
'ஜலாலி' கத்ராவாயும், ஷரீ அத்துக்கு முரண் இன்றியு
மிருந்தால் அதனை தொழில்படுத்து ''ஊர்ந்து திரிபவற்றின்
முன்னெற்றி உரோமம் அதன் 'றப்பு'டைய கையில்இருக்கிறது
உன்னுடைய மனமாகிய றப்புடைய முன்னெற்றி உரோமம்
ஜீவத் தன்மை என்ற கண்டிப்பான 'றப்பு'டைய கையிலிருக்
கிறது பிந்திய இது 'றப்புல் அர்பாபு'டைய கையிலிருக்கிறது.
பிந்திய இதுவோ 'உலூஹியத்து'டைய (அதாவது அல்மா-
இலாஹி) கையிலிருக்கிறது பிந்திய இதுவுர்வாஹிதியத்துடைய
கையிலிருக்கிறது 'வாஹிதியத்து' வஹ்தத்துடைய கையி
லிருக்கிறது வஹ்தத்து, தாத்து-மகலக்குடை கையி
லிருக்கிறது நான்காவதாக, தன்னை அறியுர் அறிவு 'ஹக்'
குடைய அறிவின் கண்ணாடியைத் தேடுகிறது; ஏனெனில் நீ
ஹக்குடைய அறிவை உன்னுடைய அறிவில் உனது இர்பான்'
ஆகிய ஞானமாக விளக்கிகொள்ளவேயாம்; அதாவது அதே
அறிவு அவனுடைய 'இர்பான்' ஆகிய ஞானத்தின் மைமை
மாக ஆரிபிடத்தில் தோற்றமளிக்கிறது இதுவே ஹக்கிடத்தி
லிருந்து பண்புகள் வெளிப்படுகின்றன என்பதைக்காட்டுகிறது
பண்புகள் தாத்தை தோற்றுவிக்கின்றன நன்மை, தீமையுடன்
ஆரிபு ஆகிய ஞானிக்கு வேலை கிடையாது அவர் ஒரு கருவி
மட்டுமேயாம் கட்டளையின் பேரிலேயே உனது பார்வையை
செலுத்திவா; கட்டளையிடுபவன் மீதோ அன்றி கட்டளையிடப்
பட்டவன் மீதோ உன்பார்வையை செலுத்தாதே இல்லாவிடில்
ஜனங்கள் செயலின்முடிவைத் தங்கள்பாலும், தங்கள் நப்ஸின்
பாலும், ஷைத்தான் மீதும் சாட்டுவார்கள் ஒருநாள் ஒரு சீடன்
தொழுகையில் கூறியதாவது:— ''அல்ஹம்து லில்லாஹி
அலாதௌபீக்கி வஅஸ்துக் பிருல்லாஹ அலாதக்ஸீரி —''
நேர்வழி காட்டிய இறைவனை நான் புகழ்கிறேன் பாவத்தி
னின்றும் காவல்தேடுகிறேன்'' என்ருர் இதனைக் கேட்ட
அவருடைய பீர் சப்தமிட்டுக் கூறியதாவது நீ உனது

தொழுகையில் தொழுது ஒரு முஸ்லிம் ஆக ஆனாய் என்று நினைத்தேனேயன்றி நீ ஒரு காபிராயும். முஷ்ரிக்காயும் ஆய்விட்டாயென்று நினைக்கவே இல்லை '' என்றார். அதற்கு முரீது ''அது எப்படி?'' என்று கேட்டார். ''நீ உனது செயல்களையும் ஹம்திலும், இஸ்திக்பாரை உனது ஜீவத் தன்மையுடனே சம்பந்தப்படுத்தினாய்'' என்று பீர் பதிலிறுத்தார். இதுவோ குப்ரும், ஷிர்க்குமாகும். ''வல்லா ஹு கலக்கும் வமாதஃமலூன்'' — அல்லஹுத்தஆலா உங்களையும், உங்கள் செயல்களையும் படைத்தான். அவன் சிருஷ்டிப்பு பூர்ண நன்மையானது ஏனெனில் உள்ளமை முற்றும் நன்மையே உன்னுடைய கற்பனையில் வரும் எத்தகைய கெடுதலும் 'அதம்' அளவில் சாட்டப்படுகிறது. ஒருவன் பாவத்தை தனதளவில் சாட்டிக்கொள்வது. 'அல்லாஹ்'க்குரிய 'அதபு' அல்லது மரியாதையாகும். ஆதம் (அலை) அவர்களும், ஹவ்வா (அலை) அவர்களும், ''ளள்ளம்னா அன்புஸனா'' - எங்களுக்கே நாங்கள் அநியாயஞ் செய்துகொண்டோம்'' என்று கூறி தங்கள் பாவங்களை தாங்களே ஒப்புக்கொண்டார்கள் தடைபண்ணப்பட்ட மரத்தின் கனியை ஏன் புசித்தீர்கள்? என்று கேட்கப்பட்டபோது! அவர்கள் அவ்வாறு கூறினார்கள் அதைல் மரியாதையை ஷிர்க்குடைய எல்லை மட்டும் கொண்டு போகக் கூடாது. ''அலா இன்ன ஔலியா அல்லாஹிலா கௌபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன்'' — நிட்சயமாய் அல்லாஹ்வின் நண்பர்களுக்கு யாதொரு அச்சமும், அபாயமுமில்லை ஷிர்க்கும் அச்சமும் தௌஹீதின் பாதையில் குறுக்கிட்டு நிற்கின்றன ''லாஇன்த நப்பீஸபாஹும் வலாமஸா உன்'' — எனது நாயனிடத்தில் காலைப்பொழுதும் மாலைப்பொழுதுமில்லை ஒருமுவஹ்ஹிது தனது நோட்டத்தை சதா தௌஹீதின்பாலே செலுத்திக் கொண்டிருக்கவேண்டும்; பாவமானது இச்சையின்றியே அவர்களினின்றும் வெளிப்பட்டபோதினும், அது அவர்களின் கேட்டின்பால் இழுத்துச் செல்லக்கூடிய முடிவைப் பெற்றிருந் தாலும் அவர்கள் பாவத்தை காட்டினார் ஷிர்க்குக்கே மிகவும் பயந்து வந்தார்கள் உனது ஜீவத் தன்மையைவிட்டும் சிவத் தன்மையை வைத்துக்கொள்ளவேண்டுமானால் நீஷிர்க்கு ஆகிய

இணை வைத்தலை விட்டும் நீங்கிக்கொள்வாயாக. ''லாது ஷ்ரிகு பில்லாஹி இன்னஷ் ஷிர்க்க லளுள் முன் அளீம்'' — அல்லாவுடன் எதனையும் சேர்க்காதே நிட்சயமயமாக ஷிர்க்கு ஆகிறது. மகாகொடிய பாவமாகும். ஜீவத் தன்மையை விட்டும் ஒருவன் தனது சிவத் தன்மையை மீண்டும் அடையப் பெறுவதானது தன்னையே கொன்று இவ்வாழ்க்கையின் மரணத்தை அடைவதினும் மிகக் கடினமானது

15-வது அத்தியாயம்

(சமாஉ இராகங் கேட்டல்)

என் ஆனந்தத்தாண்டவம் புரியவில்லை? என்று கேட்கப் பட்டபொழுது ஜுனைதுல் பக்தாதீ (றலி) அவர்கள் குர்ஆன் வாக்கியமொன்றை ஓதிக் காட்டினார்கள் அது கீழ்வரும் கருத் தடங்கியதாகும்: — நீங்கள் மலைகளைப் பார்க்கிறீர்கள் எனினும் அவைகள் மேகங்கள் கலைந்து போவதுபோது குலைந்துபோய் விடுகின்றன.'' மெய்ஞ் ஞானிகளின் சரீரம் வெளிப்படை அசைவையுடையதன்று; உள்ளீடான அசைவை மட்டுமே அது பெற்றிருக்கும். வஹ்தத்துடைய 'நுக்தா' வாகிய புள்ளி தனது சுழல் நடனத்தால் கத்ரத்துடைய அநேகத் தன்மையைப் பெறுகின்றது முற்றுந் திறந்த கண்கள் மட்டுமே இதனைப் பார்க்க இயலும் ''குன் பயகூன்'' — என்ற முறையில் இந்த நடன தாண்டவம் உள்ளீட்டிலிருந்து வெளியீட்டளவில் தாத்துடைய அசைதலாகும். உண்டாகு; அவ்வாறே ஆய்விடுகின்றது. அந்தந்த காலத்தின் 'குத்பு' பிரபஞ்சத் தின் அணுக்களுடன் 'தஜத்துல் அம்தால்' என்ற சூட்சு மாணுக்களை உயிர்ப்பித்தல் என்ற முறையின்படி தன்னை ஐக்கியப்படுத்திப் காண்கிறார் ஸமாவென்னும் இராகங் கேட்கும் நேரத்தில் 'ஔலியா'க்களில் சிலர் குர்பு-நாவாபில் என்ற நிலையை அடையப்பெறுகின்றனர்; அதில் தாங்கள்

அல்லாஹ்வைக்கொண்டே பேசுகிறார்கள். அல்லாஹ்வைக் கொண்டே கேட்கிறார்கள் அவர்கள் அகமியப் பொருளாக ஆய்விடுகிறார்கள் ஹக்கு அவர்களின் கருவியாக ஆகிறான். நானே பேசுபவனும், நானே கேட்பவனுமாய் இருக்க என்னின் வேறாக இருலோகங்களிலும் யார் இருக்கிறான் (நீர்க்குமிழி சமுத்திரத்துடன் தனக்கிருக்கும் ஐக்கியத்தை உணர்கிறது) சிலர் குர்பு-பராயினுடைய நிலையில் புகுந்துகொள்கின்றனர். அதில் அவர்கள் பாடுபவனுடைய நாவினால் பேசுபவனையும், தங்கள் சொந்த காதினால் கேட்கிறவனையும் ஹக்கை உணர்கின்றனர்; அதாவது ஹக்கு இங்கு அகமியப் பொருளாயும், அப்து கருவியாயுமிருக்கின்றது. (சமுத்திரம் ஒரு குமிழியுடன் தனக்கிருக்கும் ஏகத் தன்மையை உணர்கிறது) பாடுபவன் ஒரு மரமாக இருக்கிறது ('சினா'யின் எரியும் புதர்) கேட்பவர் மூஸா (அலை) அவர்களாயிருக்கிறார்கள். மூஸா (அலை) அவர்களுடைய சகல அவயங்களும் அவர்களுடைய காதாக மாறி. அந்த வசனத்தைக் கேட்கின்றன. அவர்களோ இன்மையாகிவிட்டார்கள் சிலர் ஐனுல் - ஐன் ஆகிய நிலையை அடைகின்றனர்; அதில் வஹ்தத்துடைய நிலை அவர்களை மிகைத்துக்கொள்கின்றது. அவர்கள் அப்பொழுது இப்னுல் வக்து ஆக ஆகின்றனர் பாடுபவனையும், பாடலையும் அவர்களின் அகமியமாகக் கண்டு அவர்களையே பாடகனைக் காண்கின்றனர் பாடகன், பாட்டு, அசைவுகள், கருவிகள் யாவும் வஹ்தானிய்யத்தாகிய ஏகத் தன்மையைவிட்டும் புறம்பாக இல்லை அதை 'அபுல்வக்து'டைய நிலை இதனைவிட சிறந்தது. இந்த நிலையைப் பெற்றவர் 'ஜம்உல்ஜம்உ' என்னும் சேகரமாகிய சமஷ்டி நிலையை உணர்ந்த பின்னர் 'பர்கு' என்னும் பிரிவினையாகிய வியஷ்டி நிலையின்பால் இறங்கி வருகின்றனர். அவர் 'சமா' வென்னும் இராகத்தை மிகைத்தவர்; இராகம் அவரை மிகைக்காது.

உல்லாச தாண்டவநிலை இராகங் கேட்பதைக்கொண்டு ஏற்படும் ஒருவித உணர்ச்சியாலான நடனம் சாதாரண நிலைமைகளில் இதனை நாயகம் (ஸல்) அவர்கள் விலக்கியிருந்தார்கள். ஆனால் அவர்களை "ஓ, முஆவியா! எவனொருவன் மஹ்பூபைப்

(சமாஉ இராகங் கேட்டல்)

பற்றி பேசப்படுவதை கேட்டமாத்திரத்தில் உல்லாஸமடையப் பெறவில்லையோ அவன் உண்மையில் ஹக்கைத் தேடுபனல்ல என்று அருளியிருக்கிறார்கள். இராகங் கேட்பதில் ஒருவனுக்கு ஏற்படும் உல்லாசநிலை 'மீதாக்' ஆகிய வாக்கு தத்தத்தின் நாளில் இறைவன் ஆத்மாக்களை குறித்து கேட்டதை அவனுக்கு ஞாபகமூட்டுகிறது என்று ஜுனைது (ரலி) சொன்னார்கள். உல்லாசம் என்பது மீன் தண்ணீரைத் தேடுவதுபோலும், கொளுத்தப்பட்ட விளக்கின்பால் விட்டில் பூச்சி தாவிப் பறந்து செல்வதுபோலுமாகும் இராகங் கேட்பதால் சில வேளை ஜனங்கள் மீறிய உல்லாசத்தால் மரணித்தும் விடுவதுண்டு இதனாலேயே இராகங் கேட்பதைத் தடைபண்ணப் பட்டிருக்கிறது.

ஒரு ஆரம்பக்காரனுக்கு பாடகனின் பாடல் உல்லாசமடையப்பெற தேவையாயிருக்கிறது, ஒரு முதிர்ந்த ஞானிக்கோ பட்சிகளின் இராகமும், காற்றின் வீசுதலும் போதுமான இராகமாயிருக்கிறது ஒருவன் கற்பனைக்குக் கட்டுப்பட்டு வார்த்தைகளின் ரசிப்பை அடைகிறான். இதுவோ ஒரு திரையாகும். மற்றவர் ஹக்குடைய தோற்றங்களை நோட்டமிடுவதில் ஈடுபட்டிருக்கிறார். அவர் முன்னர் இராகம் மறைந்துவிடுகிறது; கற்பனை யென்னும், திரையும் உயர்ந்துவிடுகிறது. மஜ்னூன், லைலாவைப் பார்த்தபொழுது தன்னையே மறந்துவிட்டார் லைலா பேசியபொழுதுதான் அவர் தன்னை உணர்ந்தார். அதாவது உல்லாச நிலையினின்றும் கீழிறங்கினார். இராகமானது தோற்றங்களிலே சொக்கிப்போய் யிருப்பவர்களை தங்களின் சாதாரண நிலைக்குக் கொண்டு வருகிறது. 1ஆயினும் ஆரம்பக் காரனுக்கு இராகமானது ஒரு ஏற்றமாயிருக்கிறது.

தீர்க்கதரசிகளின் பாதை அஸ்மாவுடையவர்களின் பாதையினும் மாறுபட்டது அஸ்மாவுடையோரின் பாதைக்கு கீழ்வரும் குர்ஆன் வாக்கியம் சான்று பகருகின்றது:— "வமா மின் தாப தின் இல்லா ஹுவ அகிதுன் பிநஃசிய திஹா இன்ன றப்பீ அலாசிராதின் முஸ்தகீம்" — (பூமியில்) ஊர்ந்து திரிபவற்றின் முன் நெற்றி உரோமங்கள் 'றப்' ஆகிய இரட்சகனின் கையிலிருக்கிறது; அந்த 'றப்' நேரான பாதையின் மீதிருக்கு

கிருன். அஸ்மாவுடைய பாதையில் தரிபட்டு நடந்து சாலிக் ஆகிய முமூட்சு தீர்க்கதாசியின் பாதையில் பின்னர் நடந்தேற வேண்டும் உல்லாச நிலையில் அவர் ஒரு சமயம் எல்லை மீறி விட்டாலும் அவர் மன்னிக்கப்படவேண்டியவரேயாம்.

16-வது அத்தியாயம்

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

'மமன்கான பீஹாதிஹி அஃமா பஹுவ பில்ஆகி ரத்தி அஃமா வஅளல்லு சபீலா' :— "இம்மையில் எவனொருவன் (அகக்கண்) குருடாக இருந்தானோ அவன் மறுமையிலும் குருடாகவும், மிகுந்த வழி கேட்டிலும் இருப்பான்" எவனொருவன் ஹக்குடைய 'தஜல்லியாத்து' ஆகிய தோற்றங்களை இம்மையில் காணவில்லையோ அவன் மறுமையிலும் அவற்றைப் பார்க்க இயலாதவனாயிருக்கிறான் இந்த உலக வாழ்வோ மறு உலக வாழ்வின் அறுவடை ஸ்தானமாயிருக்கும். அத்துன்யாமஜ்ற அதுல்ஆகிரா.

அஜீஜ் முஸப்பீ அவர்கள் சொல்கிறபடி சுவர்க்கத்தின் இரகசியமாவது நமக்கு பிரியமான ஒன்றேயாம்; நாகத்தி னுடையதோ நமக்கு விருப்பமின்றிய ஒன்றும்; ஒன்று ஷந்தோஷமுடையதும், மற்றொன்று துக்கமுடையதுமாம். சுவர்க்கத்திற்கும், நாகத்திற்கும் அநேக வாயில்கள் இருக்கின்றனவாம் போற்றத்தக்க கருமங்களும், வார்த்தைகளும் சுவர்க்கத்தின் கதவுகளாகும்: வெறுக்கத்தக்க காரியாதிகளும் சுவர்க்கத்தின் கதவுகள் ஒன்றினின்று சந்தோஷ களங்கலும் நாகத்தின் கதவுகள் ஒன்றினின்று சந்தோஷமும், மற்றொன்றினின்று துக்கமும் வெளிப்படுகின்றன. இவைகளே மறு உலகில் 'கஜத்திதுல் அம்தால்' என்னும் சூட்சுமங்களுக்களை உயிர்ப்பித்தல் என்பதினுடைய மூலங்களாகும் இறைவனுக்கு வழிபடுதல், பக்தி போன்ற நற்கிரியைகள் உருவமெடுக்கின்றன 'குப்ரு' பாவம் போன்ற துற்கிரியைகளும் கோலமெடுக்கின்றன.

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

அத்துகூலுபில்குப்ரில் ஹக்கீகி. வல்குருமிஜுன் இஸ்லாமில் மஜஸி மெய்யான குப்ரினுள் பிரவேசித்து வெளிப் படை இஸ்லாத்தினின்றும் வெளியேறிவிடு வெளிப்படை இஸ்லாமாகிறது. 'ஷிர்க்குகபீ'யான அந்தரங்க இணைவைத்தா லாகும். உனது உள்ளமையாக உன்னால் கருதப்பட்டு வரும் உனது ஜீவ அகங்காரம்தான் மாபெரும் விக்ரஹாராதனையா யிருக்கும். 'நப்ஸு'ஆகிய ஜீவத்தன்மை அல்லது அகங்காரமே பாரியவிக்ரஹம். அதனைபராமரித்து நோட்டமிடுவதே 'ஷிர்க்கு —தாத்தீ'யயாகும் மெய்யான 'குப்ரா'கிறது ஜீவ அகங்காரத் தை பிர்ம அகங்காரத்தில் கறையச் செய்துவிடுவதாம் வாக்கி யார்த்தப்படி 'குப்ரு' என்பதற்கு 'மூடிமறைத்தல்' என்ப தாகும் ஒரு வேளாண்மைக்காரன் விதையை பூமியினுள் மறைப்பதால் அவனையும் 'காபிர்' என்று அழைக்கலாம் இவ் வகையான 'குப்ரு'க்கு 'பனா' —'பில்லாஹ்' அல்லாவிலே இன் மையாதல் என்பதாகும்; ஆயினும், 'ஷரவு'படி சட்டதிட்டங் களுக்கு மாற்றமாக நடக்கும் முறை எனப்படும்.

இருவகையான 'சூபிய்'யாக்களிருக்கின்றனர் அவர் களாவன:— 'மலாமதீ' 'சலாமதீ' என்பனவாகும் வெளிப் படையில்'மலாமதீசூபி'யை குப்ருடையவர்களென்று அழைக்கப் பட்டாலும். அந்தரங்கத்தில் இவர்களே உண்மை முஸ்லீம் களும், பக்தசிகாமணிகளுமாகும் 'குப்ரு' என்பதற்கு வாக்கி யார்த்தப்படி ஒரு விதையை மண்ணினுள் மூடி மறைத்து வைத்தல் என்பதாகும் இங்கு அதன் இலட்சியார்த்தப்படிக்கு 'சாலிக்' ஆகியமுமூட்சுவினுடையஜீவத்தன்மையை 'ஹக்கு'டைய சகலவற்றையும் மூடிமறைக்கக்கூடிய உள்ளமையின் நிழலிலே 'பனா' செய்தலாகிய இன்மையாக்குதலாகும் 'சலாமதீசூபி'கள் வெளியரங்க அனுஷ்டானங்களால் மிகைக்கப்பட்டவர்கள் ஹஜரத்து கௌதுல்அஃலம் (ரலி) அவர்கள் "பாவிகளெல் லாம் பாவத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர் பக்தர்கள் பக்தி யினால் மூடப்பட்டிருக்கின்றனர்; ஆனால் அல்லாஹ்வின் மெய் யான அன்பர்கள் இவ்விரண்டையும் விட்டு நீங்கியிருக்கின் றனர்" என்று அருள் செய்திருக்கிறார்கள் "அல்குருஜுமின் இஸ்லாமில் மஜாஸிவத்துகூலுபில் குப்ரில் ஹகீகி" என்று

அபூஅலிஸீனு அவர்கள் அபூஸஊது அபுல்கைர் அவர்களுக்கு எழுதி இருக்கிறார்கள். வெளியரங்க 'இஸ்லாத்தி'னின்றும் வெளியேறி மெய்யான 'குப்ரு' அளவில் பிரவேசிப்பாயாக. நீ மெய்ப் பொருளை உசித்தால் வெறுஞ் சடங்காச்சாரங்களை விட்டுவிடு. பத்து மணங்கு திராட்சைப்பழத்தை நீ சாப்பிட்டாலும் உனக்கு ஒருபோதும் மஸ்து ஏற்பட வழி இல்லை உட்சதையானது பழுத்துவிட்ட உடன் வெளித் தோலால் யாதொரு பிரயோ ஜனமுமில்லை.

ஷெய்குயஹ்யா முனீரி அவர்கள் ஔலியாக்களுடைய பாதைகள் ஒரே மாதிரியாயிராது என்று எழுதியிருக்கிறார்கள் ஒருவர் திருப்தியாக உணவருந்தி சுகமாகத் தூங்குகிறார்; மற்றொருவர் நோன்பிலிருந்து இராவெல்லாம் கண் விழித்திருக்கிறார் ஒருவர் ஜனங்களுடன் சாவகாசித்துக்கொண்டிருக்கிறார் மற்றொருவர் ஜனங்களுடைய சம்பந்தத்தைவிட்டு நீங்கி தனித்துவாழ் கிறார். ஒருவர் கந்தையான உடைகளை அணிந்துகொண்டிருக் கிறார் மற்றொருவர் நேர்த்தியான பட்டுகளாலும். உயர்தர ஆடைகளாலும் தன்னை அலங்கரித்துக்கொண்டிருக்கிறார் ஒருவர் மௌனம் சாதிக்கிறார். மற்றவர் சதா சம்பாஷித்துக்கொண் டிருக்கிறார் ஒருவர் தனது நிலைமையை மறைத்துக்கொண்டிருக் கிறார். மற்றொருவர் தனது நிலைமையை வெளிப்படுத்துகிறார். ஒருவர் பக்தன். பாவியென்று வித்தியாசம் பாராட்டாது யாவ ருக்கும் ஊழியஞ் செய்கிறார் மற்றவர் பாவிகளுடைய சலா முக்குக் கூட பதிலுரைப்பதில்லை. கேட்காமல் தானே வரும் நன்கொடைகளை ஒருவர் ஒப்புக்கொள்கிறார். மற்றவர் அதனை அங்கீகரிப்பதில்லை

'பனா'வென்னும் இன்மையாக்கலில் 'இன்மைசெய்தல்' என்ற நினைப்பு மட்டும் தரிபடுகிறது: ஒருவர் அதிலேயே அந்த நினைப்புடனே 'பகா'வை அடையப்பெறுகிறார் 'பனாஉல்பனா' வாகிய இன்மையின் இன்மையில் இன்மை செய்தலாகிய செய் தலின் நினைப்புங்கூட நழுவிவிடுகிறது இந்த நினைப்பின்றியே ஒருவர் இதில் 'பகா'வை அடைகிறார் முந்திய முறையில் அவர் தனது சொந்த 'தாத்திலே' இன்மையாக்கப்படவில்லை;

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

பிந்தியதில் தனது சொந்த 'பகா'வாகிய தரிபாட்டின் அறிவுடனும், தனது கைர் ஆகிய வேறு இன்மையானதின் நினைப்புடனும் 'ஹக்குடன்' நித்தியகால தரிபாட்டைப் பெற்றிருக்கிறான் 'அதம்'என்னும் இன்மைக்குஇன்மையின் உணர்ச்சிகூட கிடையாது.

சிலர் அறிவுக்கு செயலைக்காட்டிலும் முதல் ஸ்தானம் கொடுக்கிறார் சிலர் அதற்கு மாற்றமாகக் கருதுகிறார்கள். உண்மை யாதெனில் செயலாகிறது அறிவின் ரூபமாகும் இவ்விரண்டையும் கடந்து 'ஹால்' என்னும் ஆனந்த உணர்ச்சி நிலையை அடையப் பெறு. இதுவே இவ்விரண்டினுடையது மான முடிவான இலட்சியம் 'அஹ்லுல்லாஹ்'வாகிய அல்லாஹ்க்குரியவர்கள் தௌஹீது என்னும் அத்துவித நாட்டத்தையன்றி வேறு எந்த விஷயத்திலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டார்கள் அறிவு, செயல், நிலைமை இம்மூன்றும் படிப்படியாக நிகழ்கின்றன நேர்மையான செயல் ஒரு முறை போதகரின் வழிகாட்டிலால் நேர்மையான அறிவிலிருந்து ஏற்படுகின்றது

'பனா' நிலையில் 'சாலிக்கு' சகல 'தஅய்யுனாத்'தாகிய குறிப்புகளை 'ஹக்கு'டைய 'தஜல்லியாத்து' ஆகிய பிரதிபிம்பத் தோற்றங்களாகவும், தன்னை அவற்றிலின்றும் ஒன்றாகவும் காண்கிறார்; 'பகா'வுடைய நிலையை அடைந்துவிட்டபோது அவைகளைத் தன்னுடையதாகக் காண்கிறார் முந்தியதில் 'சாலிக்கு'டைய அறிவு 'ஹக்கு'டை அறிவில் மறைந்துவிடுகிறது. பிந்தியதில் 'ஹக்குடை'ய அறிவு 'சாலிக்கு'டைய அறிவில் மறைந்து விடுகிறது. இப்பொழுது தனது சுய அறிவினாலேயே தானே அறியப்பட்டவனாக இருக்க (சாலிக்கு ஆகிய) அவன் அறிகிறான் 'கைர்' என்னும் பிறப் பொருளின் அறிவினாலன்று. ஏனெனில் அவனுடைய அறிவினால் 'கைர்' என்னும் அன்னிய வஸ்து மறைந்துவிட்டது ஹக்குடைய அறிவும், உள்ளமையும், 'சாலிக்கு'டைய 'நான்' என்னுந் தன்மையின் அறிவிலேயும், உள்ளமையிலும் மறைந்து விட்டன இங்கு தன்னை மெய்ப்பொருளாகவும் பிறவற்றை

(பிரபஞ்சத்தை) தன்னுடைய சுயார்த்த அறிவினுல் ஜீவிப்பன வாயும் காண்கிருன் 'சாலிக்கு' தனது துவிதத்தினுல் ஹக்குடைய உள்ளமையைக் கொண்டுதான் உள்ளமையைப் பெற்றிருப்பதாகக் கண்டான் முன்பு அவன் 'ஹக்கு'டைய அறிவினுல் அறிபவனுக தன்னை அறிந்தான். இப்பொழுது தன்னுடைய சுயார்த்த அறிவினுலேயே தன்னை அறிபவனுக அவன் தெரிகிருன் மதனவீ ஷரீபில் கீழ்வரும் பொருளமைந்த ஒருபைத்து வருகிறது அதாவது:— ''சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்து விடுகிறது; பாமர மக்கள் இதனை எவ்வாறு நம்புவர்?'' ஹக்குடைய அறிவில் சூபியுடைய அறிவு மறையுங்காலை சூபியுடைய இன்மையாகலாகிய 'பனு'வைத் தேடும். ஆனல் சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறையும் வேளை சூபியுடைய பகாவாகிய தரிபடுக்கலைத் தேடும். சூபியுடைய அறிவு ஹக்குடைய அறிவில் நழுவிவிடும் பொழுது சூபியுடைய அறிவு ஹக்குடைய அறிவாகவே ஆய்விடுகின்றது. இவ்வாறாக படி ஏறுதல் அல்லது அதிகாமகமாகிய 'உருஜில்' 'சூபி' தன்னை ஹக்காகக் காண்கிருர்: ஏனெனில் இங்கு சூபியும். அவருடைய அறிவும் இன்மையாக்கப் பட்டுவிட்டன சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு நழுவி விட்டபொழுது அது 'பகா'வென்னும் தரிபாடு ஆகும் ஹக்குடைய அறிவு சூபியுடைய அறிவாகவே ஆகிறது இங்கு நீர் குமிழியே கடலுடைய அகமியமாக ஆய்விட்டபொழுது. கேவலம்—அது ஒரு குமிழியாக மட்டும் தரிப்பதில்லை குமிழியுடைய அகமியமாக கடல் ஆய்விட்டபொழுது அந்த குமிழி கடல் தானகவே ஆகி தனது சொந்த அகமியத்தைக் காண்கின்றது மீண்டும் அறிவு உள்ளமையென்ற கண்டிப்புகளின் கீழ் சூபி இருக்கிருர். தன்னையே மறைத்துக்கொண்டு இன்மையாகியபொழுது அவருடைய அறிவு எல்லையற்றதாக ஆய்விடுகிறது இதுவே 'பனு' நிலையாகும். 'ஹக்குடைய' அறிவு சூபியுடைய கண்டிப்பின் கீழ்வரும்பொழுது சம்பூர்ண அறிவு கண்டிப்பான அறிவாக ஆகி விடுகிறது. இதுவே 'பகா' நிலையாகும் கடல் ஒரு குமிழியினுள் மறைவது போன்றும் இதுவே 'நுஸுல்' என்னும்படி இறங்குதல் அல்லது ஊர்த்துவமுகம் எனப்படும் மதனவீயில் கீழ்க்காணும் கருத்தடங்கிய பைத்து

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

வருமாறு :— '' ஒவ்வொரு அணுவிலும் ஒரு சூரியன் இருக்கிறது; ஒரு ஆட்டுக்குட்டியின் தோலின் கீழ் ஒரு வீர சிங்கம் இருக்கின்றது; முந்தியதில், உள்ளமையின் கண்டிப்புகளுக்குள் அகண்டமானதோர் சமுத்திரத்தை 'சூபி' காண்கிறார்; கண்டிப்பற்றதை தனது கண்டிப்புகளுக்குள் — சூரியனை அணுவுக்குள் — இருக்கக் கண்டடைகிறார் சம்பூர்ண அறிவையும், உள்ளமையையும் தன்னுள் கண்டிப்பாகப் பார்க்குங்காலே அவர் 'சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்துவிட்டது' என்று கூறுகிறார். 'பனா'வென்பது சூபியை இன்மையாக்கி ஹக்கை உண்மையாக்குதலாம்; பகாவென்பது சூபியை உண்மையாக்கி ஹக்கை இன்மைபடுத்தலாகும் 'வேறு' என்னும் 'கைர்' இங்கு அறவே மறைந்து விடுகின்றது; இந்நிலையில் பிரபஞ்சம் பூராவும் அவாது சொந்த 'கயால்லி'யாகிய பிரதி பிம்பத்தோற்றமாகக்காணப்படுகிறது சவர்வமும் அருடையநாமங்கள், பண்புகள் ஆகியவற்றின் பொருள்களாய்விளங்குகின்றன இந்த நிலையில் ஷரீஅத்து (சரியை) தரீகத்து (கிரியை) ஆகியவற்றின் சட்டத்திட்டங்கள், அனுஷ்டானங்கள் யாவும் நழுவிடுகின்றன. 'பனா'வென்பது ஒருவனுடைய பொய்யான ஜீவத்தன்மை இன்மையாதலாம் பகாவென்பது மெய்யான பிர்மத்தன்மை அல்லது ஹக்குத்தன்மை சகலவற்றிலுமிருக்கக் காண்பதாம் தாத்துடைய திக்ரு என்னும் தியானம் தான் 'அனா'வாகிய மெய்யான 'நான்' என்பதினுடைய 'திக்ரு' ஆகும் எனவே அவர்கள், ''அனல்ஹக்கு'' 'நான் பிர்மம்' ஆகிய மெய்ப் பொருள் என்று பறை சாற்றினர்கள் இந்த நிலையில் வேற்றுமை நீங்கி விடுகின்றது ''ஹூ'' — (அவன்) என்பது படர்க்கை. ஒருமை பிரதிச் சொல்லாகும். தன்மையைப் பெற்றிருப்பவன் பிரசன்னமாயும், பிரத்தியட்சமாயு மிருக்கையில் இந்த படர்க்கை ஒருமை தேவையில்லை ஹக்கு தன்னைக் கொண்டு பேசும்பொழுது அவன் ''நான் மெய்ப்பொருள்'' — அனல் ஹக்கு என்றும் '' நானே துய்யவன் '' — 'சுப்ஹானி' என்றும் கூறுகின்றான் சூபியிடைய தாத்து ஆகிய யதார்த்த ரூபத்தில் ஹக்கு தரிபட்டும், சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு தரிபட்டுமிருக்கிறது சூபியாகிறவர் சிருஷ்டிப்பொருளின் தன்மைக்கு இறங்குங்காலே தான் முன்னிருந்த நிலைமையைக்

குறித்தவராக. 'ஹுவல்ஹக்கு' — (அவனே மெய்ப்பொருள்) என்கிறார் அடிமைத்தனத்தை அடிக்கடி ஞாபகமூட்டுவதே 'ஹுவல் ஹக்கு' — என்பதும். அவனுடைய பண்புகளை அவனுக்கு கொடுப்பதுமாகும்; ஹக்கை அடிக்கடி ஞாபகிப்ப தாகிறது தனக்கே அப்பண்புகளை அளிப்பதாகும்; 'ஷாஹே ஆலம்' அவர்கள் ஹக்குடைய 'ஜலாலி' அல்லது ஜமாலி (சக்தி அல்லது சாந்தி) யான திருநாமங்களை ஜெபித்தபொழுது தானே அந்நாமங்களுக்குரியோராஞர்கள். "அல்-ஜப்-பார்" அல்லது "அல்-கஹ்ஹார்" என்ற நாமங்களை கூறியதும் அவர்கள் ஒரு சிங்கம் அல்லது யானையுடைய கோலத்தில் தோற்றமாவார்கள் அவர்களின் சீடர்கள் யாவரும் அவர்களை விட்டும் விரண்டோடிவிடுவர்; "அல்ஜமீல் என்ற திருநாமத்தை மொழிந்தபொழுது அவர்கள் அழகிய தோர் வாலிபனின் கோலத்தில் காட்சியளிப்பதுண்டு.

"தானின்றிய ஆகாயமே ஆரிபுடைய அற்புதல்" இதில் நின்றும் ஆரிபு என்பது என்னவென்று விளங்கிக்கொள். உஜூது முதலக்க ஆகிய அகண்ட பரிபூர்ண உள்ளமையே 'ஆரிபு' ஆகிய மெய்ஞான சொரூபியின் பரிசுத்த 'தாத்து' ஆகிய தத்சொரூபம் அல்லது சுயார்த்த ரூபம்; 'ஜபரூத்' (காரண லோகம்) அவனுடைய பண்பாதிகளின் உலகம்; 'மலகூத்து' (சூட்சும லோகம்) என்பது அவரின் செயல்களின் உலகு. 'நாசூத்து' (ஸ்தூல லோகம்) அவரது 'ஆதார்' என்னும் அதேயங்களாகும் முடிவாக அடங்கலும் 'ஆரிபு' ஆகும். "அல்ஹம்துலில்லா ஹிறப்பில் ஆலமீன்" — (சம்பூர்ணமான) சகல புகழும் சர்வலோக இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கேயாம் 'அக்லுகுல்லி' யிலிருந்து மண் மண்டலம்வரை பூரா படைப்பும் அவனது காவலைத் தேடுகின்றன. அஸ்மாவாகிய திருநாமங்களினதும், தீர்க்கதரிசியினுடையதுமான நேரிய பாதைகள் அவரிடத்திலிருக்கின்றன. ஆரிபு என்ற அறிபவரும். 'மஃரூப்' என்ற அறியப்பட்டதும் ஏகமேயாம் (ஞாதுருவும், ஞேயமும் ஒன்றே)

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

காதல் என்ற நெருப்பே ஞானம் என்னும் ஜோதியாக காலப் போக்கில் ஏற்ட்டுவிடுகின்றது. அவ்வாறு ஆய்விடுங்காலே (அந்த காதல் நெருப்பு) தனது உஷ்ணத்தை நழுவவிட்டு மன அமைதியையும். இன்ப அனுபவத்தையும் அடையப்பெறுகிறது. மதனவீ ஷரீபில் :— "நான்காம் நிலையில் ஹக்குடன்உரையாடல் என்பதைத்தவிர தேடுதலென்பதில்லை;

ஆரிபுடைய இன்ப நுகர்ச்சி காதலைவிட தலைசிறந்தது என்ற பொருள் பொருந்திய ஓர் பைத்து வருகின்றது

இஷ்கு ஆகிய காதலின் சூடு ஒருதரமே எரிகின்றது; ஞானத்தினதோ அநேக தடவைகள் எரிகின்றன ஞானியோ பானியாகிய இன்மையாக்கப்பட்டவர்; ஆயினும். ஒவ்வொரு வினாடியும், அவர் பாகீயாகிய தரிபாட்டைப் பெறுகிறார். காதலரின் இன்பம் தனது சொந்தஉள்ளமையின் பேரிலிருக்கும். இன்மையாக்கப்பட்ட ஞானியினதோ ஹக்கின் பேரிலாகும். அந்த ஞானி ஹில்வா'வாகிய தித்திப்பு பாதார்த்தந்தானாகவே ஆய்விடுகிறார். இன்பானுபவத்தின் பாகுபாடுகூட அவரிடத்தில் கிடையாது முல்லாஜாமீ (றஹ்) அவர்கள். "ஒவ்வொருவரும் ஒரே தடவை மரிக்கிறார்கள் ஏழை 'ஜாமீ' மட்டும் அநேக தடவைகள் மரணிக்கிறான்" என்று கூறியிருக்கிறார்கள்.

காதல் என்பது 'ஜலால்' ஆகிய மகிமை அல்லது மகத்துவத்தின் 'தஜல்லி'யாகிய தோற்றம். 'இபான்' ஆகிய ஞானமோ 'ஜமால்' ஆகிய பேரழகின் 'தஜல்லி'யாகிய தோற்றம். ஒன்றில், காதலர் 'பனா'வாகிய இன்மையாக்கப்படுகிறார்; மற்றொன்றில், 'ஆரிபு' 'பகா'வான தரிபாட்டைப் பெறுகிறார் ஒன்றில் அது "நீ என்னைப் பார்க்க சக்திபெறமாட்டாய்" — லன்த-ரானீ என்றும்; மற்றொன்றில், "நீ உன் றப்பளவில் பார்ப்பாயாக" — "அலம் தர இலாறப்பிக" "பரிசுத்தப் பள்ளியிலிருந்து தூரத்திலமைந்திருக்கும் பள்ளிக்கு ஒரு இரவில் தனது அடிமையை எடுத்துச் சென்ற அவனுக்கே மகிமை யாவும்"

ஒன்றில் காதலர் தானாகவே இறைவனிடம் முடுகுகிறார்; மற்றொன்றில் 'ஆரிபு' இறைவனால் அழைக்கப்படுகிறார். மூஸா (அலை) அவர்கள் நெருப்பு தேடிப்போனபொழுது இறைவன் அவர்களிடம் ஒரு எரியும் புதரிலிருந்து வசனித்தான். அவன் இதர எந்த கோலத்தில் தோன்றியிருந்தாலும் மூஸா (அலை) அவர்கள் திரும்பிப்போயிருப்பார்கள். தனது மனதை எதன் பேரில் செலுத்தியிருக்கிறானோ அந்த வஸ்துவின் பால்தான் மனிதன் திரும்புகிறான். சிலருக்கு இறைவன் முகவரை கீராத வாலிபனின் கோலத்தில் காட்சியளித்தான். ஷெய்கு பஹாவுத்தீன் நக்ஷபந்தீ அவர்களுக்கு ஷெய்கு நிஜாமுதீன் ஔலியா உடைய கோலத்தில் தோன்றினான். நமது நாயகம் (ஸல்) அவர்களுடைய அருமை மகளான செய்யிதுனா பாத்திமா (ரலி) அவர்களுக்கு நாயகம் (ஸல்) அவர்களுடைய திருகோலத்திலே காட்சியளித்தான் 'கஷ்பு'டையவர்களின் மனதில் ஏற்படும். 'தஜல்லியாத்து'க்கு யாதொரு கோலமும், வடிவமுமில்லை

சுப்ஹானல்லதீ அஸ்ராபி அப்திலைலன் — (மிஃராஜுடைய) இராவிலே தனது அடியானைப் பிரயாணப்படச் செய்த அவனுக்கே மகிமை அடிமை போகவில்லையென்றும், போகுமாறு செய்யப்பட்டாரென்பதும் இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்று. வினைச் சொல்லுக்குரிய எழுவாய் 'அவன்' என்பதாகும். மூஸா (அலை) அவர்களுடைய விஷயத்தில். "வலம்மா ஜாஅ மூஸா லிமீகாத்தினா" — நம்மால் குறிப்பிடப்பட்ட அந்த வேளையில் மூஸா 'வந்தாரென்றும் "லன்தரானீ" — 'நீர் என்னைக் காணமாட்டீர்," என்ற பதில் அவர்களுக்குக் கிடைத்ததென்றும் கூறப்படுகின்றது. அழைக்கப்பட்டவரின் நிலையில் "அலம்ய அலமு பிஅன்னல்லாஹ யரா" — நிட்சயமாக நாயன் பார்க்கின்றானென்று அவருக்குத் தெரியாதா? என்பதாகும். ஹக்குடைய திருசமுகத்துக் கொண்டு போகப்பட்டு அங்கு பார்பவரும், பார்க்கப்பட்டதும் 'ஹக்கு' ஆக ஆன வேளை நாயகம் (ஸல்) அவர்களுடைய கண்கள் வேறு ஆகிய பிரபஞ்ச அளவில் குருடாயிருந்ததென்பதை இராவில் நடந்தேரிய வசனங்கள் தெள்ளெனக்

(உர்ஜூ — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

காட்டுகின்றன: "நாயகம் (ஸல்) அவர்களுடைய நேத்திரங்கள் எத்திசையும் திரும்பவில்லை; எல்லையையும் மீறிவிடவில்லை."

முன்னர் நாயகம் (ஸல்) அவர்கள் பார்ப்பவர்களாயும், 'ஹக்கு' பார்க்கப்பட்டவனுயும், அவர்கள் கேட்பவர்களாயும் 'ஹக்கு' பேசுபவனுயும் இருந்தார்கள். இப்பொழுது முன்பின் மாற்றமாய்விட்டன. அவ்வேளை முஹம்மதே! சற்றே நிற்பீராக உம்முடைய நாயகன் உம்மை தொழுதுகொண்டிருக்கிருன் முன்னர் நீர் இறைவனைப் புகழ்ந்தீர்; இப்பொழுது அவன் உம் மீது புகழ் கூறுகின்ருன். (அதாவது) அவன் தனது முந்திய நப்ஸின் மீது புகழ் மொழிகளைக் கூறுகிருன் முன்னர் நீர் புகழ்பவராயிருந்தீர்: இப்பொழுதோ நீர் (மஹ்மூது ஆகிய) புகழ்ப்பட்டவராக இருக்கின்றீர்.

தொழுகை இரு வகைப்படும். அவையான: —

1) சாதரண தொழுகை 2) விஷேத் தொழுகை என்பனவாம் பிரபஞ்ச வஸ்து ஒவ்வொன்றும் சாதாரண தொழுகையில் ஈடுபட்டிருக்கின்றன: "யுஸப்பிஹுலில் லாஹி மாப்பிஸ்ஸமாவாத்தி வல் அர்ளி" — வானங்களிலுள்ளவையும் பூமியிலுள்ளவையும் (அவனது மகிமையைப்பற்றிப்) புகழ் கூறிக்கொண்டிருக்கின்றன. விஷேஷத் தொழுகையோ ஆரிபீன் ஆபிதீன்களாகிய பக்தர்களுடையதும் ஞான சொரூபிகளுடையதுமானதாகிய தொழுகையாகும் கண்டிப்புகளென்பது 'ஹக்கு'டைய 'கைர்' ஆகிய பிறப்பொருளன்று ஏனெனில் அவைகளுக்கு ஹக்குக்கு வேருக யாதொரு அத்தியாவசிய உள்ளமையுமில்லை 'சாலிக்கு' ஆகிய முமுட்சு 'பனு' நிலையை அடைந்துவிட்டபோது தாத்துடைய அத்தியாவசிய உள்ளமைக்கு வேருனதோர் உள்ளமையைப் பெறுகிருன்; அதாவது, அவன் சிபாத்துடைய உள்ளமையை அடைகிருன். இதனலேயே மீர் ஹசன் சஆதத் என்பார் தங்களுடைய 'தன்ஸீ அத்துல் அர்வாஹ' என்ற கிதாபில், (கண்டிப்பையுடைய) பந்தாவான அடிமை 'முஜாஹதா' வென்னும் தெண்டிப்பிடினல் ஒரு 'வலி'யாக ஆகின்ருரே

யொழிய ஹக்காக ஆவதில்லை மன்சூர் ஹல்லாஜ் (ரஹ்) அவர்களுடைய அனல் ஹக்கு பிரதாபமும், அபூயஸீது (ரஹ்) அவர்களுடைய 'சுப்ஹானீ' யும் வெறும் கண்டிப்புகளேயாம் 'கலாம்' என்னும் பேச்சுடைய பண்பின் தோற்றங்களே இவைகள்; அவருடைய நாவைக்கொண்டு அவன் பேசுகிறான். 'சிஜ்ற' மரத்தின் வசனமாகிய, "இன்னீ அனல்லாஹுலா இலாஹ இல்லா அன" — "நான் உனது அல்லாஹ்வாகும். என்னின் வேறான நாயன் யாருமில்லை" என்பது இந்த வகையைச் சேர்ந்ததே. மன்சூர். அபூயஸீது. மரம் ஆகியவர்கள் இறை வசனத்தின் தோற்றப் பொருள்களேயாகும் அவர்கள் ஹக்குடைய கருவிகளேயாவர் எனினும் ஹக்குதானன்று. 'பனா'வில் சாலிக்குடைய உணர்ச்சி மறைந்து விடுகின்றது. இங்கு உணர்ச்சியென்றால் வஸ்துக்களின் அறிவும் 'கைர்' ஆகிய அன்னியத்தை ஸ்திரப்படுத்தலுமாம் அவ்வேளை அவருடைய பார்வையில் வஸ்துக்கள் உள்ளமையாகவே ஆய்விடுகின்றன. இந்த நிலை சதா தரிபட்டுவிட்டால் அவர் மஜ்தூப் அல்லது பரவச நிலையில் சொக்கியவராகின்றார்.

அலி (கர்) அவர்கள் அருளியிருப்பதாவது:—

என்னுடைய மனதில் மாபெரும் (அந்தரங்க) ஞானம் ஒன்று உண்டாயிருக்கிறது அதனை நான் வெளிப்படுத்துவேனாயின் கிணற்றினுள் இறக்கப்பட்ட (வாளியின்) கயிற்றினைப் போல் நீங்கள் யாவரும் நடுநடுங்குவீர்கள் இப்னு அப்பாஸ் (றலி) அவர்கள் "அலம்தர கைபகலகல்லா ஹு சப்அசமாவாத்தின் திபாக்கா" — ஏழு வானங்களையும் எவ்வாறு அல்லாஹ் சமமாகப் படைத்தான், என்ற வேத வாக்கியத்தை நான் வியாக்கியானம் செய்திடுவேனாகில் நீங்கள் என்னை கல்லெறிந்து கொன்று விடுவீர்களென்று கூறியிருக்கிறார்கள்.

'தஜல்லி'யாகிய தோற்றம் இரு வகைப்படும் அவை யாவன:— றஹ்மானி தஜல்லி (இறைவனது தஜல்லியாகிய தோற்றம்) றூஹானி தஜல்லி (மனதின் தஜல்லியாகிய தோற்றம்) எனப்படும். அனேக சாலிக்குகள் பிந்தியதின் பாதையில் ஒரு வித இன்பமும், மகிழ்ச்சியும் அவர்கள் மனதில்

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோ முகம்)

உதயமான வேளை அவற்றினால் திருப்தியடைந்து வழி கேட்டு
லாகிவிடுகின்றார்கள் இந்தவிதமான தஜல்லியாகிய பிரதிபிம்பத்
தோற்றங்கூட அனல்ஹக்கு - நானே மெய்ப் பொருள் என்று
கூறும். ஏனெனில் சர்வ சிருஷ்டிகளும் தம் சிம்மாசனத்தின்
முன்னர் சாஷ்டாங்கஞ் செய்வதைக் கண்டு அவ்வாறு கூறு
கின்றது. ஆனால் அது ஒரு நொடிப்பொழுதில் மறைந்துவிடக்
கூடியதேயாம்; அதாவது. அதில் மெய்யாக இன்மையாதல்
என்பதில்லை. அது மறைந்துவிட்டபொழுது மீண்டும் மிருக
இச்சைகள் ஏற்படுகின்றன ‘நப்ஸு’ முன்னதைவிட
இப்பொழுது மனிதன்பேரில் தனது ஆதிக்கத்தை அதிதீவிர
பலத்துடனும், வன்மையுடனும் செலுத்தும் ‘ஹக்கு’ சினை
மலையில் தோற்றமளித்தகாலை அம்மலைத் ‘தவிடு பொடியாய்த்
தகர்ந்தெரியப்பட்டதைப் போன்று ‘தஜல்லி றஹ்மானியாகிய
இறைவனது பிரதிபிம்பத் தோற்றத்தால் நப்ஸு என்னும்
அகங்காரமாகிய பர்வதம் தூள் தூளாகிவிடும் ‘சைத்தானி
தஜல்லியில் சந்தேகங்கள் அடிக்கடி மனதைத் தாக்கிக்கொண்
டிருக்கும். தெய்வீக ஞானத்தின் இன்பம் இங்கு பூர்த்தி
யடையப் பெறுவதில்லை. கர்வம் மனதில் இடம் பெறுகிறது.
ஒருவனது ஜீவ அகங்காரம் மேலும் மேலும் உறாகிப் பெரு
கின்றது. அப்பொழுது ஷரீஅத்துடைய விலங்குகளைத்
தகர்த்துக்கொள்கிறான். ஆனால் றஹ்மானி தஜல்லியில் இவை
யாவும் பொசுக்கப்பட்டு விடுகின்றன.

“தஜல்லியானது ஒரு பீட பூமியிலுள்ள மலை மீது
வீழ்ந்தால், அம்மலை தறிக்கப்பட்ட கள்ளியைப் போன்று துண்டு
துண்டாகிவிடும்;

உள்ளமை என்ற மலை மீது விழுமாயின் தெருவி
லிருக்கும் தூசியை போன்று அவ்வுள்ளமை அப்பொழுது ஆகி
விடும். “இதில் சாலிக்குடைய இருப்பு இருப்பின்மையாக மாறு
கின்றது சிறுமலையைப் போன்று அது திரும்ப மீளுவதில்லை
சிறுமலையும் மீண்டும் தனது முந்திய இருப்பைப் பெறவில்லை.
ஆகையால் மூஸா (அலை) அவர்கள் தங்களுக்கென தனி உள்ள
மையை வைத்துக்கொண்டே இறைவனைப் பார்க்க நாடின

பொழுது தவிடு பொடியாய்போய் நிலை குலைந்த அந்த சிறு மலையைப் பார்க்கும்படி ஏவப்பட்டார்கள். தனக்கென் ஒரு தனி உள்ளமையை வைத்துக்கொண்டு மூஸா (அலை) அவர்கள் றஹ்மானி தஜல்லியை தாங்க முடியாது மயக்கமடைந்து கீழே விழுந்துவிட்டார்கள்.

றஹ்மானி தஜல்லியில் சாலிக்கு தனது ஜீவத் தன்மை நீக்கப்படவும், அது மீண்டும் திருப்பா வண்ணமாயும் காண்கிறான். இதில் அல்லாஹ்வைத் தெரிசிக்க வேண்டுமென்ற ஆசை மேலும் மேலும் அதிகரிக்கின்றது. றஹ்மானி தஜல்லி மூன்று வகைப்படும்:— (1) செயல்கள் (2) பண்புகள் (3) 'தாத்து' ஆகிய சுயார்த்த ரூபம் ஆகியவற்றினுடையவை. தாத்துடைய தஜல்லி மிகவும் அரிது. இன்மையாவதைவிடவும், அகங்காரத்தை ஒழித்தலைவிடவும் யாதுமில்லை.

நாம் 'அப்ஆல்' ஆகிய செயல்கள், சிபாத்தாகிய பண்பு இவ்விரண்டின் தஜல்லியைப்பற்றிப் பேசுவோம். தொழில் படும் சிபாத்தாகிய பண்புகளின் தஜல்லியில் 'சாலிக்கு' தனது மனதில் தனது இருப்புத் தன்மையையும், வஸ்துக்களையும் ஹக்குடைய அவர் ஹக்கை கேட்பவனைகவும் பார்ப்பவனையும் காதுகளாலும் கண்களாலும் பார்க்கிறார் தொழில்படும் பண்புகளுடைய கண்ணாடியாகப் பார்க்கிறார் ஹக்குடைய தாத்திலே வஸ்துக்களுடைய தாத்து இவ்வாறாக இன்மையாகிறது. அநேகத் தன்மை அவரை விட்டும் மறைந்துவிடுகின்றன அறிவாலும், கற்பனையாலும் மட்டுமின்றி தனது கண்களைக் கொண்டே அவர் ஒரே தாத்தையும், ஒரே உள்ளமையும் பார்க்கிறார் தன்னையும், வஸ்துக்களையும்பார்ப்பதை இழந்துவிடுகிறார். இதுவே அவர் அல்லாஹ்வை அறியும் அறிவாக ஆகிறது ஆகவே அவர், ''இன்னி அனல்லாஹ்லா இலாஹ இல்லா அன'' நானே அல்லாஹ்வாகும். என்னின்வேறாக நாயன் யாருமில்லை. என்று சொல்லுகிறார். இதனை மத்னவீஷரீப் கீழ்வருமாறு நன்கு விளக்கிக் காட்டுகிறது —'' சூபியுடைய அறிவில் ஹக்குடைய அறிவு மறைந்து விடுகிறது; எவ்வாறு பாமரர்கள் இதனை உணர்ந்துக்

(உஷ்ரு — படி எடுதல் அல்லது அசிரா முகம்)

சொல்வர்?'' 'ஆமீ'னாக்காக அம்பிட்டபொழுது ஹக்காக ஆலா வேற்றுமையும் மறைந்து விடுகின்றது. படைக்கப் பிரதிப் பெயர் ஆமினை விட்டும் மறைந்ததும் ஆமீ தனது 'சுயம்' ஆகிய தன்மையைத் தேடுகிறார். பிசாசு பிடித்தவன் முழுவன், தான் பிசாசாக இல்லாவிடினும், தானே பிசாசென்று பாவித்துச் சொல்கிறான் ஹால் என்னும் நிலையானதொரு பயன்தரத்தக்கதுமல்ல, பாயஸீது (றலி) அவர்கள் ஒவ்வொருவருக்கும் நிலைப் பின் முடிவும், பல்ஹாமிய 'ஹால்' உண்டாயிருக்கிறது. அதன் நிலைப்பிறைல் கட்டுப்பட்டிராதபத்தில் ஒரு 'ஆரிபு' ஆகியவனாகி கஷ்புடையவனாகிறானென்று கூறியிருக்கிறார்கள். 'வ ஜித்கா'க் கைப் பற்றிய 'ஆமீ' அறுக்காகிய பரிசுத்த முறையைக் [illegible] பிடிப்பதில்லை; மேலும், 'ஹக்கு' என்னும் பாவசத்தையும் பெறுவதில்லை எல்லா நிலைமைகளிலும் அவர் தன்னையே காண்கிறார். பாயஸீது (றலி) அவர்கள் நூபுல்லத்தாகிய தரித்தலைத்தைத் தரித்திருப்பவில்லை. தன்னை ஹக்கு ஆக நினைக்கக்கண்டார்கள் 'ஆமீ' ஒருவர் சிறுமியிலும், அழகிலும் காணும் எம்பெருமானைப் போன்றதொரே சிறுவிலும், அழகிலும் காணும் ஒருவரைப் போன்றதையே ஒரு தோட்டக்கிலும் கண்டு அமர்ந்திருக்கிறார்'' [ஸாஅதி] பாவை முதல், பாவமின்மையும் அவனுக்கு ஒன்றாகவே தோன்றுகின்றன. நாயகம் (ஸல்) அவர்கள், ''நல்லுருவிலும் பின்புறமும் லாஹூ—'' என்ற அழகும் அல்லாஹ்வுடைய அழகின் தின்று வமாயிருக்கும். ''இன்னல் லாஹஜமீலுன் யுஹிப்புல்ஜமால்—'' அல்லாஹ் அழகு சௌந்தரியமுடையவன்; அழகையே அவன் நேசிக்கிறான்; அவனே சம்பூர்ண அழகுடையோன் ஒருவனே. பாடு:— நீ அழகான பெண்மணிகளைப் பார்க்கும் காலெல்லாம் லோகத்தின் ஹவ்வையின் கண்களை ஞாபகித்துக்கொள்; உன்னை இம்மையிலிருந்து மறுமைக்கும், மறுமையிலிருந்து சம்பூர்ண அழகுபொருந்திய ஹக்கு அளவிலும் சாட்டிவிடு நாயகம் (ஸல்) அவர்கள் ஜைனப் [றலி] அவர்களைக் கண்டபோது தன்னை சம்பூர்ண அழகின் பால் சாய்த்திட்டு அபூபக்கர் சித்தீக் [றலி] அவர்களிடத்தான் மிஃராஜில் கண்டிருந்தைய [அழகின்] ஒரு சிறு அம்சத்தை மட்டும் ஜைனப் இடம் கண்டேன், என்று கூறினார்கள். 'புறாக்'கில் மிஃராஜ் சென்றவர்களே அவர்கள் நாசுத்திலேயே வாழ்ந்து கண்டார்கள்

உருஜ் ஆகியபடிஏறுதல் அல்லது அதோ முகத்தில் 'சாலிக்கு' அர்ஷு என்னும் தெய்வாசம் வரையிலும் பூதாகாயத்தைக்காண்கிறார். அங்கிருந்துசடத்தன்மையானது சூட்சுமத்தின் நிறத்தை எடுத்து. மிகுந்த கனக்குறைவின் காரணமாக ஒளி அல்லது ஜோதியாக மாறுகிறது. ஆன்ம லோகத்தில் பின்னர் ஆன்மாவின் நிறத்தைப் பெறுகிறது. 'சாலிக்கு' அஃயானுடைய நிலைக்கு வந்துவிட்டபொழுது தன்னை ஒரு 'ஐன்' ஆக மட்டும் பார்க்கிறார். அதாவது அறிவிலுள்ள ஒரு கோலமாகக் காண்கிறார் பின்னர் முடிவில் ஹகீகத்து இன்ஸானியாகிய மானிடனின் அசலியத்தை அடையப் பெறுகிறார் தாத்துடைய தஜல்லி உதயமாய்விட்டவேளை இந்நிலைகளெல்லாம் பொசுக்கப்பட்டு இல்லாமலாக்கப்பட்டு சகலமும் அகண்ட பரிபூர்ணமாக ஆய்விடுகின்றது பிறகு அவர் மண்மண்டலம்வரையிலுள்ளஎல்லா நிலைகளிலும் கீழிறங்கி ஒர்சம்பூர்ணகலீபா அல்லது ஹக்குடைய பிரதிநிதியாக ஆகிறார் இதுதான் ஸைரெ-கபீர் என்னும் பெரிய யாத்திரை எனப்படும் ஸைர் - சகீர் என்ற சிறிய யாத்திரையில் ஆன்மா, மனம், நப்ஸு, சடம் ஆகிய யாவும் ஹக்குடைய வர்ணனை நீட்டப்படும்காலை நிலைபெற்று ஆண்டவனின் அருள் 'சாலிக்கு' மீது இறங்குகின்றது. ஸ்தூல சரீரம் சூட்சுமமாயும், சூட்சுமம் காரணமாயும், 'காரணம் மகாகாரணமாகவும் இவ்வாறே அவர் உன்னததைப் பெறுகிறார்.

உள்ளமையின் குறிப்புகள் அல்லது எல்லைக் கோடுகள் நீங்கிய இடமே 'பனா' வெனப்படும் ஒரு திட ஞானயாகிய 'சூபி' தன்னுடைய உள்ளமையும். தாத்தையும் மறைய காண்கிறார் 'குல்லுஷைஇன் ஹாலிகுன் இல்லாவஜ்ஹஹு' — அவனது முகம் நீங்கலாக இதர ஒவ்வொரு வஸ்த்தும் அழியக்கூடியதே' என்பதை அவன் நன்கு உணர்கின்றார் இந்த நிலையிலிருந்து அவர்இறங்கும்பொழுதுஹக்குடையபண்புகளுடனேயே 'பகா'வாகிய தரிபாட்டில்இறங்குகிறார் அவ்வாறனமனிதர்களை அக்காலத்தில் தீர்க்கதரிசிகளென்று அழைக்கப்பட்டது. இக்காலத்திலோ 'குத்புல் அக்தாப்' என்றும் 'கௌது' என்றும் அழைக்கப்படுகிறது அவர்களுக்கு முஹம்மது (ஸல்) அவர்களே நடுநிலையாக இருந்தார்கள்

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

அல்லாவிலே இன்மையானவரையே பக்கீர் எனக்
அல்லாவிலே இன்மையானவரையே பக்கீர் எனக்

கூறப்படுகிறது. எனவே பிரபஞ்சம் பூராவும் அவருடைய
ஆஸ்தி. ஒருநாள் ஒரு 'குத்பு' யாத்திரை செய்துகொண்டிருக்
கிறார். அவர் ஒரு வயலில் நின்ற குதிரையொன்றைப் பிடித்து
அதன்மீது சவாரியாகப் போனார். அவருடன் சென்ற செய்யிது
முஹம்மது கேஸுதாராஜ் (ரஹ்) அவர்கள் இதனை சட்டவிரோத
மென்று சுட்டிக்காட்டினார்கள். அதற்கு அந்த பக்கீர் "நான்
'கைர்' ஆகியபிறவற்றின் சொத்தைத் திருடவில்லை என்பதை நீர்
பார்க்கவில்லையா" என்று பதிலுரைத்தார் இவ்வாறு ஜுனைது
நூரீ, ரூயம் முதலானவர்கள் பக்தாதின் கடைவீதியிலுள்ள
கடைகளிலிருந்து வஸ்துக்களை சொந்தக்காரர் அனுமதியின்றி
எடுத்துக்கொண்டார்கள். ஏனெனில் அவர்கள் 'ஹக்கி' லே
'பானி' இன்மையாக்கி இருந்தார்கள்.

'மிஃராஜு' ஆகிறது 'ஹுவல்குருஜு' அன்குல்லி
ஷையின் சிவல்லாஹ்' — அதாவது மாசிவல்லாவாகிய அல்லா
வின் வேறு ஆகிய பிறப்பொருளை விட்டும் வெளியாகி தன்னை
காலி செய்துகொள்ளுதலாகும், அது இரு வகைப்படும்:—
அதாவது சிறிய மிஃராஜ்' பெரிய 'மிஃராஜ்' எனப்படும். முந்திய
தாகிறது 'ஸுலூக்கு' 'முஜாஹதா' (தெண்டிப்பு) 'நப்சு'க்கு
மாற்றஞ் செய்தலாகியவற்றைக் கொண்டு ஜீவத் தன்மையை
விட்டும்வெளியேறுதல். இது ஆபிதீன்களாகிய வணக்கவாளி
களுடையது- பெரிய 'மிஃராஜா' கிறது 'நபீ'யாகிய இன்மையும்,
இத்பாத்து என்னும் தரிபடுத்தலுமாகும். 'கைர்' என்னும் பிறப்
பொருளை இன்மையாக்கி 'ஹக்கு' ஆகிய மெய்ப்பொருளை தரி
படுத்தலாகும். எனவே தன்னை இன்மையாக்கி ஹக்கில் தரி
பாடாக்கி இருக்கிறார்.

குரு கடாச்சத்தாலும் வழி காட்டலாலும் ஒருவர் தனது
சொந்தஉள்ளமையின் அம்சத்தை 'ஹக்குடைய' உள்ளமையின்
அம்சமாகமாற்றிக்கொள்கிறார் 'தப்ஸை' பணி செய்தல் என்பது
அவருக்கு தேவையாகாது 'ஷுத்தாரிய்யா'க்களிடத்தில் பணி
செய்த லென்பது கிடையாது.

அஸ்ராரே அனல்ஹக்

'கைர்' என்னும் அன்னிய வஸ்தே இல்லையென்ருகும் பொழுது எதனை நாம் இன்மையாக்குவது? என்ற கேள்வி எழுகிழுது. இன்மை செய்தல் என்பது சொல்மாத்திரமேயுள்ளது. ஏனெனில் உள்ளமை அற்றது முடிவில் உள்ளமை அற்றதேயாம்.

இத்திஹாது (சிருஷ்டிப்பொருள்களுடன் ஹக்கு இரண்டறக் கலந்து இருப்பது) என்பது ஒரு வஸ்து மற்ருெரு வஸ்துடன் சேர்ந்திருப்பதல்ல. 'ஹக்கு' டைய உள்ளமையுடன் வஸ்துக்கள்வெளியீடாகும்போது 'ஹக்கு'டன்வஸ்துக்கள் இத்திஹாதைப் பெற்றிருக்கின்றன. இதுவே 'மாஹிய்யத்து' (சேர்ந்திருத்தல், சூழ்ந்திருத்தல், சமீபித்திருத்தல்) என்பதன் பொருள். அது சாயத்துடன் வார்த்தைகளுக்கும், வார்த்தைகளுடன் சாயத்துக்கும் இருக்கும் ஐக்கியம் போன்ருகும். குர்ஆனில் மாஹிய்யத்து 'இக்கிஹாது' 'குர்பத்து' என்றவார்த்தைகள் எங்கெங்கு நிகழ்கின்றதோ அங்கங்கு 'சூபியா'க்கள் மேற்கூறப்பட்ட கருத்தையே கொள்வர். இவ்வாறே சிருஷ்டிப் பொருள், பண்புகள் ஆகியவை இதுபோன்றே பொருள் கொள்ளப்படும்.

ஷெய்குஜுனைதுல்லா அவர்கள் சொல்படி:— அல்லாவுடைய தெரிசனை வெகுநுட்பமானதோர் 'ஹிஜாப்' ஆகிய திரையின் வழியாகத்தான் கிடைக்கப்பெறுகின்றது. இந்த மிருதுவான திரையே. ஒருவன் அந்த தெரிசனையாகிய பார்வையைப் பெற்றிருக்கிருன் என்ற அறிவு ஆகும். இத்திரையானது நீக்கப்பட்டவுடன் பார்ப்பவனும், பார்க்கப்பட்டவனும் 'ஹக்கு' ஆக ஆகின்ருன். இதுவே 'பனுயெஇல்மி' என்னும் அறிவில் இன்மையாதல் யென்பதாம்.

''சொல்வீராக! எனது இறைவா! எனக்கு அறிவைப் பெருக்குவாயாக'' குல்ரப்பி சித்னீ இல்மன்: கால முடிவு பரியந்தம் ஒவ்வொரு 'தஜல்லியும்' எதன்மீது வீழ்கின்றதோ அதன்பால் அதிகமான ஒளியைப் பரத்துகின்றது

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

'பனு' நிலையை 'அப்து' ஆகிய அடிமை அடையும் பொழுது அவர் 'மகாமுன்மறைமுது' என்ற புகழப்பட்டஸ்தானத்தைப் பெறுகிறார். அதில் அவர் ஹக்குடைய பண்புகளை அளிக்கப்படுகிறார். மேலும் சகலவற்றின் எஜமானுமாயும். இறைவனது பிரதிநிதியாகிய கலீபாவாயும் ஆகிறார். ''இன்னீஜாஇலுன் பில்அர்ளிகலீபா'' — நாம் திடனாக உம்மைப் பூமியில் ஒருபிரதிநிதியாக்கினோம்" 'குத்பும்.கௌதுர்முதற்குறிப்பாகிய வஹ்தத்திலிருந்து பூத பௌதிகங்களால் சமைந்த மண் மண்டலம்வரை எஜமானர்களாயிருக்கிறார்கள் ஆனால்அஹமது கஸ்ஸாலி அவர்கள், இரு தரப்பட்ட பாத்தியதை அல்லது உரிமையைத் தேடாதே. அடிமை ஒரு குதிரை மீதேறிச் செல்கிறான். குதிரை அவனுடைய சொத்தாக ஆவதில்லை. '' அனல் ஹக்கு' ' — நானே மெய்ப் பொருள் என்று யார் சொல்கிறார்களோ அவர்கள் எரியும் புதராகிய சினு' மலையின் மரத்தினைப் போன்றவர்களே. அந்த மலையோ 'இன்னீ அனல்லாஹு லா இலாஇல்லாஅனு' — திடனாக நானே அல்லாவாகும், என்னையன்றி நாயன் யாருமில்லை என்று கூறிற்று
'' குர்ஆன் நபி அவர்களுடைய உதடுகளினின்றும் வெளிவந்த போதிலும், ஹக்கு பேசவில்லை என்று எவன் கூறுகிறானோ அவன் ஒரு காபிர் ஆகும். '' எவனொருவன் லாஇலாஹஇல்லா அனு (என்னைத்தவிர நாயன் யாருமில்லை) என்று சொல்கிறானோ அவன் கைர் ஆகிய பிறப் பொருளின் இருப்பை இன்மையாக்கி உள்ளமையை ஹக்கின்பால் தரிபடுத்துகிறான்.

'' அரப்து ரப்பீ பிரப்பீ — 'நான் எனது நாயனை என் நாயனைக்கொண்டே அறிந்தேன்.' ஆரிபும் ஒரு 'கைர்'தான் ''

சம்பூர்ணமான ஒரு பரம இரகசியத்தை வெளிப்படுத்தலே ' அனல் ஹக்கு, அனல் ஹக்கு என்று கூறுதற்கு ஹக்கையன்றி இருப்பது வேறு யார்?

ஷைய்குமுஹியித்தீன் அவர்கள் தங்கள் 'ரிஸாலாத்துல் அன்வார்' என்றும் நூலில் சில மஷாயிக்குகள் இம்மையிலேயே ஹக்கைத் தெரிசிக்கலாம் என்பதை நம்புகின்றனர் சிலர்

தெரிசனையை மறு உலகிற்கு விடுத்து செயல்களில் மட்டுமே நம்பிக்கை வைக்கின்றனர் ஷெய்கு அவர்களோ முந்திய வகையில் நம்பிக்கை கொள்கின்றனர்.

'அல் இல்முஹூ ஜாபுல் அக்பர்' — அறிவு ஓர் மாபெருந் திரையாயிருக்கிறது' — பேராச்சரிய நிலையில் கொண்டுவிடக்கூடிய 'ஷுஹூது' ஆகிய தெரிசனையைக் கொண்டு அடையப்படக்கூடிய அறிவு இதுவே. பரவசத்தால் அடையப்படும் அறிவு இந்த பேராச்சரியத்தினின்றும் எழக் கூடிய மனோ அமைதியை அடையச் செய்கின்றது. ஒன்று தேனைப்பார்ப்பதால் உண்டாகும் அறிவு போன்றும், மற்றொன்று அந்த தேனை ருசிப்பதால் உண்டாகும் அறிவு போன்றுமாகும்.

நாசூத்தாகிய கண்காட்சி உலகிலிருந்து ஆரம்பித்து மலகூத்தாகிய செயல் உலகினுட் புகுந்து, ஜபரூத்து எனும் பண்பு உலகிலாகி, பின்னர், அஸ்மாவாகிய நாமகத் திருநாமத் திலும் அதன் பின்னர் அஃயான் ஆகிய வஸ்துக்களின் அகமியங் களிலும் ஆகி சாலிக்கு தாத்தாகியதத் சொரூபத்தை அடையும் பொழுது தாத்தே தஜல்லியான ஹக்குடையதாத்தின் தோற்றம் அவன் மீது உதயமாகிறது. சம்பூர்ணத் தன்மையின் விசால மான விகாசம் அவன் முன்பு திறந்து காட்டுகிறது. அதில் சகல குறிப்புகளும் நீக்கப்பட்டுவிடுகின்றன. இதுவே பனாவாகும் 'பகாபில்லாஹ்வாகிய அல்லாவைக் கொண்டுள்ள தரிபாட்டின் நிலையில் மீண்டும் உணர்வடைந்து இந்த நிலையிலிருந்து கீழிறங்கி படிப்படியாக, தாத்து நிலையினின்றும், சிபாத்து (வாஹூத்து)டைய உணர்வற்ற (ஜபரூத்து)டைய உணர்வைப் பெற்று தன்னை வஹ்தத்தி லிருந்துக் காண்கின்றார் அதுவே முஹம்மது (ஸல்) அவர் களுடைய அகமியம் மனித வர்க்கத்தினுடைய தொகை (சமஷ்டி)யான அகமியத்தை அதில் உணர்கிறார் அதுவே வாஹிதிய்யது. இலாஹியான தெய்வீகப் பண்புகளாலும். கியானீ அல்லது கௌனியான மனித அல்லது சிருஷ்டிப் பண்புகளாலும் ஆன இரவலான உள்ளமையையும். அறிவை யும் பின்னர் கண்டு. அதன் பிறகு தன்னையே தோற்றுபனையும்

(உஜ்ரு — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

அதன் தோற்றமாயும் அறிகிருன். அத்தகையோரே தங்கள் காலத்தில் கௌதும், குத்பும், முஹம்மது (ஸல்) அவர்களுடைய பிரதிநிதியுமாகும். இதுதான் முஹம்மது (ஸல்) அர்களுடைய மிஃராஜு அல்லது ஸைர்-கபீர் ஆகிய பெரிய யாத்திரையாகும். ஸைர்-ஸகீர் ஆகிய சிறிய யாத்திரையில் தாத்துடைய தஜல்லி மானிட வர்க்கத்தின் அகமியமாகிய 'வாஹிதிய்யத்தில் அவன் மீது உதயமாகிறது தெய்வீக, மானுஷீகப் பண்புகளாலான தனதுதாத்தைக்கொண்டுதன்னைத்தோற்றுவிப்பவராயும், 'உலூஹியத்தா'கிய நாயகத் தன்மையிலிருந்து. கீழ் நிலைவரையுமுள்ள தோற்றமாயும் அறிகிருர். அவர் அப்பொழுது பர்து என்னும் தனித்தவரென்று அழைக்கப்படுகிருர். சில நேரங்களில் இந்த இன்மையாக்குதலிலிருந்து அவர் பகா அளவில் திரும்பி தன்னை ஹக்குடைய பண்புகளின் தோற்றங்களுடைய கருவியாகவோ அல்லது ஹக்கை தனது செயல்களின் கருவியாகவோ காண்கின்ருன் அவர் அவ்வாருகவே தனது அகமியத்தை சகல வஸ்த்துக்களுடைய தொகுப்பான அகமியமாகவோ அல்லது ஹக்கை தனது தொகுப்பான அகமியத்தின் அகமியமாகவோ பார்க்கிருர் வஸ்துக்களின் செயலாதிகளை தனது பண்புகளாக அவர் கண்டு 'அனல் ஹக்கு' — நானே மெய்பொருள் என்று கோஷிக்கிருர். அல்லது அவற்றை ஹக்குடைய செயலாதிகளென்று கண்டு 'ஹுவல்ஹக்கு' அவன் மெய்ப்பொருள் என சப்திக்கிருர் அவர் தனது எஜமானனின் தொழிற்சாலையில் ஒரு வேலையாளைப் போன்று நிற்கின்ருர். அல்லது எஜமானது சர்வ சக்திகளையும் அடையப்பெற்று தானே எஜமானனுக ஆய்விடுகிருர்.

'விலாயத்து' என்னும் 'அரபி' பதம் விலா என்ற மூல மொழியிலிருந்து அடையப் பெற்றது அதற்கு நட்பு, சிநேகம் என்று அர்த்தம் பொது விலாயத்து என்றும், பொது விசேஷ விலாயத்தென்றும் இரு வகைப்படும். விலாயத்தாகிறது சகல முஃமினுகிய விசுவாசிகளுக்கும் சொந்தமானது "அல்லாஹு வலிய்யுல்லதீன ஆமனூ யுக்ரிஜுஹும் மினள்ளுமாத்தி இலன்நூரி" — விசுவாசமுடையயோர்களின் போஷகன் அல்லாவாயிருக்கும். அவன் இருளினின்றும் ஒளியின்பால் அவர்களைக் கொண்டு வருகிருன்"

விசேஷ விலாயத்து தங்களை ஹக்கில் இன்மையாகச் செய்துகொண்ட சாலிக்குகளுக்கே உரியது. " பனாஉல்அப்து பில்ஹக்கி ' ஸைர் இலல்லா அல்லா அளவிலே பிரயாணித்தலின் முடிவான எல்லைதான் பனாவாகும் ஸைர் பில்லா- அல்லாவிலே பிரயாணித்தலின் ஆரம்ப நிலையே பகாவெனப்படும். தன்னில் உறைந்திருப்பனவும், தன்பேரில் கடுமையாகப்பற்றிக்கொண்டு தனக்கு இன்ப சுகங்கங்களைக் கொடுத்து வந்தவையுமான தாது. தாவர, மானிட. வானவ தகுதி அல்லது யோக்கியதைகளின் இச்சைகளுடைய தேவைகளில் நின்றுமுள்ள சாலிக்குடைய நாட்டத்தின் சிதைவுகள்தான் முந்தி சொல்லபட்ட யாத்திரையின் பாதையிலுள்ள தடைகளாகும் வெற்றினின்றும் பரிசுத்தமடைந்ததும் அவர் இன்மையாக்கப்படுகிறார் சில மஜ்தூபுகளைப் போல் அவர் மீண்டும் அவ்விச்சைகளளவில் திரும்புவதில்லை. அவர் ஒரு தனியான வர்ணனைத் தீட்டிக்கொண்டு "எல்லாக் குறிப்புகளை விட்டும் வெளிப்பட்டு சம்பூர்ணத்தை அடையப் பெறுகிறார். இந்த முதல் யாத்திரையை முடித்துவிட்ட பொழுது ஒருவன் இரண்டாவதைத் தொடங்குகிறான். தன்னில் இன்மையானதும் ஹக்குடைய, தெரிசனையில் அவர் 'பாகீ' தரிபாட்டை அடைகிறார் அவ்வேளை அவர் தன்னுடைய தாத்தை தனது நப்ஸாகிய ஜீவத்தன்மையென்று உணர்வதில்லை ஆனால் அதனைத் தோற்றுவிப்பதும். தோற்றமும். தோற்றப்பட்டதுமாக உணர்கிறார்

பனா நிலையில் பல்வேறு வகைகளுண்டு அவை யாவன :— செயலில் பனாவென்றும், பண்புகளில் பனாவென்றும், தாத்தில் பனாவென்றும் பலதிறப்படும் ஒருவன் செயலின் பானியாகிய பனா செய்பவனாகவும், மற்ற இரண்டிலும் இல்லாதவனாயுமிருக்கக்கூடும் இவ்வாறேதான் தரிபடுத்தலாகிய பகாவைப் பொறுத்துமிருக்கிறது

ஷிர்க்கு ஆகிய இணையை விட்டும் நீங்கி இருத்தலே மெய்யான முக்தியாகும். அந்த ஷிர்க்கிதான் நரக நெருப்புக்குக் காரணமாயிருக்கின்றது.

17-வது அத்தியாயம்

மு'ஜிஸாத்து - அற்புதங்கள்

லாஹூத்துடைய நிலையினின்றும் ஆரிபு ஆகிய ஞானி கீழிறங்கும் பொழுதுதான் அற்புதங்கள் நிகழ்த்தப்படுகின்றன. ஏனெனில் 'லாஹூத்து' (மகாகாரணம்) உடைய நிலையிலோ அவர் தன்னில்தானே சொக்கிப்போய் தனது பண்புகள் யாவும் இன்மையாக்கப்பட்டவராயிருக்கிறார் அங்கு ஒரு அற்புதம் நிகழுமாயின் அதை அவர் முற்றும் உணராதவராயிருக்கிறார். அது அவரை அறியாமலே நிகழ்வதாகும் சத்தியத்தைப்பரத்துவதற்காக உணர்வுடனே அற்புதங்களைநிகழ்த்தப்படுவது ஜபரூத்தில் நின்றுமாகும் விசேஷ தோற்றங்களான அன்பியா ஔலியாக்களுடைய அற்புதங்கள் 'அல்ஹாதி அர்ரஷீத்து போன்ற அஸ்மா-ஜமாலியினின்றும். அல்முதில்லு போன்ற அஸ்மாஜலாலியினின்றுமாயிருக்கும், இவைகள் இஸ்திஃராஜ் என்றழைக்கப்படும். அற்புதங்களென்றழைப்பது பொருத்தமன்று எழுதுபவன் கையிலுள்ள எழுது கோலுக்கு ஒப்பாகும் அற்புதங்கள். சக்தி அறிவு ஆகியவற்றில் இறைவனதுசெயலை வெளிப்படுத்தும் நோக்கங்கொண்டே அவைகள் நிகழ்த்தப்படுகின்றன எனவே காரண காரியம் அங்கில்லை பிந்தியவை இறைவனது அல்ஹக்கீம் என்ற திருநாமத்தின் தோற்றமாகும் அதனுடைய செயல் கண்டிப்புகளின் வாயிலாய் சிருஷ்டியில் வெளிப்படுத்தப்படுகின்றது இருள் நிறைந்த கண்டிப்புகளின் காரணமாக சிருஷ்டிப்பொருளுக்கு சக்தியின்மீது யாதொரு ஆதிக்கமுமில்லை கண்டிப்புகள் இல்லாவிடில் எல்லையற்ற முறையில் செயல் நிகழும் காரண காரியத்தின் போக்குக்குக் கீழ்ப்பட்டிராது. ரியாளத்து ஆகிய பொருத்தம், முஜாஹதாவாகிய கண்டிப்பு ஆகியவற்றின் பிரயோஜனம், கஸ்பு என்ற கண்ணாடியினின்றும் கண்டிப்புகளென்ற இருளைப் போக்குதற்கேயாம் எல்லையற்ற முறையில் செயல்நிகழ ஆத்மாவானது களங்கமற்ற கண்ணாடி போன்றுதெளிவையடைகிறது. சம்பூர்ணபண்புகள் கண்டிப்பான பண்புகளாகின்றன குறிப்புகள்நீக்கப்படும்பொழுது பிந்தியவை

சம்பூர்ணமாக ஆகின்றன. சலிக்கு இடத்தில் இந்த குறிப்ப களின் நீக்கம் ஜபாதத்தில் ஏற்படுகிறது லாஹூத்து. மலகூத்து. நாசூத்திலன்று. முஃஜிஸாத்தும், காமாத்தும் இந்த ஒன்றில்தான் பேதப்படுகின்றன. ஒன்று தீர்க்கதரிசிகளிடமிருந்து பகிரங்கமாக வெளிப்படுத்தப்படுகின்றது; மற்றொன்றில் ஒளலியாக்களால் இரகசியமாகக் கடைபிடிக்கப்படுகின்றது. அந்த இரகசியம் நீக்கப்பட்டு வெளிப்படுத்தப்படும்காலை விலாயத்து நபித்துவமாக ஆகும் அதுபோல் காராமாத்து, முஃஜிஸாத்தாக மாறுகின்றது. இதனை வெளிப்படுத்தல் கொண்டு தான் தீர்க்கதரிசிகள் ஒளலியாக்களைவிடச் சிறந்தவர்களாக இருக்கிறார்கள். மேலும் தெய்வ கட்டளைப்படி ஜனங்களை தீர்க்கதரிசிகள் நேர்வழிக்கு அழைக்குங்காலை ஒளலியாக்களும் அவர்களைத் தொடர்கிறார்கள். எனவே "எவனொருவன் நபிமார்களின் வழிக்கு மாற்றமானதோர் பாதையைத் தேடுகிறானோ, அவன் தனது எல்லையை ஒருக்காலும் அடைந்தேறமாட்டான்' (சா.அதி) 'வியாயத்து' ..கிறது நுபுவ்வத்தைவிட நலசிறந்தது. என்று சொல்லப்பட்டிருக்கிறது. " அவ்விலாயத்து அப்ளனன் ரினான் நுபுவ்வத்து " எனினும் ஒரு 'வலீ' ஒரு நபியைவிட மேலானவரென்று சொல்லப்பட்டில்லை; ஏனெனில் நபிக்கோ ஜனங்களை சத்தியத்தின்பால் அழைக்கும் அதிகப்பட்ட ஒரு வேலையும் அளிக்கப்பட்டிருக்கின்றது.

'குர்புபராயிகளில்' ஹக்கு செவிகர்த்தாவும். அப்து அவனது கருவியாகவும் இருக்கின்றனர். 'மாரமைத்த இதரமைத்த வலாகின்னல்லாஹாமா' (பத்ரு போரில்). நீர் (ஒரு கைப்பிடி மண்ணை) எறிந்தபோது நீர் எறியவில்லை. ஆனால் அல்லாஹ்தான் எறிந்தான் வெளித் தோற்றங்களுக்கு நபி (ஸல்) அவர்கள்தான் எறிந்தார்கள். மரித்தெழும் நாளின் உண்மையை ஊர்ஜிதம் செய்ய வெவ்வேறு மலை சிகரங்களின் மீதும் வைக்கப்பட்ட நான்கு பக்ஷிகளையும் இப்ராஹீம் (அலை) அவர்கள் அழைத்தார்கள். குர்பு-நவாபிலின் அதற்கு மாற்றமான முறையாயிருக்கிறது ஹக்குடைய பண்புகளைக்கொண்டு 'அப்து' தன்னைப் போர்த்திக்கொள்கிறான். அதாவது ஜீவியம் என்னும் பண்பைக்கொண்டு தன்னைப் போர்த்திக்கொண்டு

(உரூஜ் — படி ஏறுதல் அல்லது அதோமுகம்)

அவன் மரணித்ததை உயிர்ப்பிக்கிறான். இதுவே, 'விலாயத்து'டைய நிலையாகுமேயன்றி நபித்துவமன்று

இறைவன் ஆதம் (அலை) அவர்கள் பால் ஊதினான். அவர்கள் ஒரு உயிர் மனிதனை ஆனார்கள். களிமண்ணினாலான பறவைகளின் மீது ஈஸா (அலை) அவர்கள் ஊதினார்கள்; அவைகள் உயிர்ப்பெற்றன. இரு தடவைகளிலும் ஊதியது ஒன்றேயாம். "நாம் யாவரும் புல்லாங்குழல்களே அவன்தான் அவைகளை ஊதுபவன் (வாசிப்பவன்)" அவனது உக்கிரவுகொண்டே சகல அசைவுகளும் ஏற்படுகின்றன. உலகில் சகல அசைவுகளும் 'தஜல்லி'யாகிய பிரதிபிம்பங்களேயாம். "குல்லயௌமின் ஹுவ பீஷான்" — ஒவ்வொரு நாளும் அவன் மகிமையுடைய நிலையிலிருக்கிறான். 'ஷரீஅத்தில்' சட்டத்தின் கட்டுப்பாடிருக்கிறது; ஏனெனில், அவன் தனது சொந்த பண்புகளைத் தானே விளக்கியிருக்கிறான் "உன்னுடைய தாத்து அதம் ஆகிய இன்மை.." 'அதம்' ஆகிய இன்மையைக் கட்டுப்பாட்டிலாக்க முடியாது. அவனுடைய 'தாத்து' 'சிபாத்து' 'அப்ஆல்' ஆகியவற்றின் தோற்றமான நீ அவற்றை அனிக்கப்பட்டதாக்கிறாய். தன்னை ஏகேது தோற்றுவிக்கிறதோ அது தோற்றக்கிரியையுள்ளதாயிருக்கிறது. ஹக்குடைய அசைவுகள் சிருஷ்டிப் பொருளில் வெளியீடாயிருக்கின்றது "வல்லாஹு கலக்கும் வமா தஃமலூன்" — 'உங்களையும், உங்கள் செயல்களையும் அவன் படைத்தான்.' தீர்க்கதரிசிகளுடையவும், ஒலிமார்களுடையவுமான முஃஜிஸாத்தும், கராமாத்தும் மெய்யாக இறைவனது செயல்களேயாம். அவற்றை வெளிப்படுத்த அவர்களுக்கு யாதொரு சக்தியுமில்லை. அவர்கள் அதை நிகழ்க்கும் வேளை ஹக்கில் 'பனா'வாகித்தான் அவ்வாறு செய்கிறார்கள். குர்புந்நவாபிலில் 'சாலிக்கு' கன்ஸில் 'பனா'வாகிறான்; ஹக்கு அவனுடைய அகமியமாகவும், சாலிக்குடைய பண்புகள் ஹக்குடைய கருவியாகவும் ஆகின்றன. குர்பு நவாபிலில் சாலிக்குடைய 'சிபாத்து' ஹக்குடைய சிபாத்தைப் போன்று தோன்றுகின்றது. அதாவது, சாலிக்கு ஹக்குடைய அகமியம்போலவும், ஹக்கு அவனுடைய கருவியாகவும் தோன்றுகிறான். ஒரு விஷயத்தில்! சமுத்திரம் குமிழியின்

அகமியமாக ஆகி, அதன் சமுத்திர தன்மை நீங்கிவிடுகின்றது. அடிமைத்தனம் (அப்தியத்து) அதன் தன்மையாக மாறுகிறது. மற்ருெரு விஷயத்தில் குமிழி சமுத்திரத்தின் அகமியமாக ஆகுங்காலே நாயத் தன்மை அதன் தன்மையாக ஆகிறது ஒரு நிலையில் யானை ஒன்று ஒரு எறும்பின் கால்களைக்கொண்டு நடக்கின்றது மற்ருென்றில், எறும்பு ஒன்று யானை ஒன்றின் கால்களால் நடந்து செல்கின்றது பிந்திய முறையின் விளைவே சகல அற்புதங்களுமாகும். ஒன்றில், ஒரு வீரன் ஊசியைக் கொண்டு குத்துவது போன்றிருக்கின்றது. இதன் முடிவோ அற்பமானது செயல் கருவிக்கு கீழ்ப்பட்டிருக்கிறது. மற்ருென் றில் ஒரு குழந்தை வாளிஞல் வெட்டுவது போன்ரும். அதே காரணங்கொண்டு அதன் முடிவு மகா பெரிதாயிருக்கிறது. சாலிக்கு அவனுடையகாதாக ஆகின்ருன் அவன் தூரத்தில் நடக்கும் பேச்சுக்களைக் கேட்கிருன். கொலேயிலிருக்கும் வஸ்துக்களைப்பார்கின்ருன். மூஸா (அலை) அவர்கள் ஹக்குடைய கேள்வியைக் கொண்டு ஹக்குடைய வசனத்தைக் கேட்டார்கள். சகல திசைகளிலிருந்தும் அவ்வாறு கேட்டார்கள். ஹக்கின் மூலமாக 'அப்து' கேட்கும் வேளை அவன் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் சப்தத்தை ஒரே நேரத்தில் செவிமடுக்கிருன். 'பத்ரு போரில் நபி (ஸல்) அவர்கள் ஒரு பிடி மண்ணை எறிந்த போது அதை நீர் எறியவில்லை, அல்லாஹ் எறிந்தான்.' குர் ஆனுகிறது நாயகம் (ஸல்) அலை, அவர்களுடைய உதடு களிலிருந்து வெளிவந்தபோதிலும், அதனை ஹக்கு பேசவில்லை என்று சொல்பவன் நிட்சயமாக் காபிராகும்.'' (மத்னவீ) '' இவைகள் குர்பு பராயிஞைடைய உதாரணங்கள். அற்புதங்கள் குர்பு நவாபிலுடைய வெளிப்படையான விளக்கமாகும் ''

18-வது அத்தியாயம்

(ஜப்ரு. கத்ரு — ஆதி கற்பனை)

வஸ்துக்களின் 'தக்தீர்' (ஆதி கற்பனை அல்லது தெய்வ சங்கற்பம்) 'அஃயான் ஆகிய வஸ்து அகமியத்துடன் சம்பந்தப்பட்டும், அவ்வவற்றின் அஃயானுடைய கையிலுமிருக்கின்றது ஏனெனில் வஸ்துக்களின் அகமியங்களுக்கு வஸ்துக்களைப்பற்றிய ஹக்குடைய அறிவு உடன்பட்டிருக்கின்றது அவனும் ஹக்குடைய சொந்ததகுதிகளான அகமியங்களைமாற்றுவதற்கு ஹக்குக்கே இந்த விஷயத்தில் 'சக்தியில்லை. அகமியங்கள் மறைந்து செயலற்று கிடக்கின்றன ஹக்கு அவற்றிக்கு வெளியீட்டை அளிக்கிருன். அவனுடைய செயல் அந்த அகமியத்தின் பலனைத்தானே சுயமாகவே கொண்டு வருவதில்லை அறியும் விஷயத்தில் அறிவு அறியப்படும். பொருளுக்கு உடன்பட்டிருக்கிறது. ஆனல் அறியப்படு பொருளோ அறிவுக்குக் கீழ்ப்பட்டதன்று. சாயந்துவைப்போன்ற துணிக்கு சாயம் போடுகிருனே யன்றி சாயத்தை உற்பத்தி செய்பவன் அன்று எனவே, அஃயான் ஆகிய அகமியங்கள் அவற்றின் 'தக்தீர்' ஆகிய கற்பனையில் ஆள்கின்றவர்களாயும், ஹக்கு ஆளப்படுபவனுயுமிருக்கின்றனர். ஹக்கு அஃயான்களின் தகுதி அல்லது யோக்கியதையின் தேவைகளுக்குத் தக்கவாறு ஆக்ஞாபித்து (கட்டளையிட்டு) அவற்றின் சிருஷ்டி கர்த்தாவாக ஆனன். 'அ.'.யான் காரிஜ' என்னும் வெளிப்படை அ.'.யான்' அல்லது வஸ்துக்களுக்கு ஐக்கியப்பட்டிருக்கின்றன. அந்த அகமியங்களும் அவற்றின் 'ஷ'யூனத்' ஆகிய மறைமுகமான சக்திகளுக்கு கீழ்ப்பட்டிருக்கின்றன வெளியீடான 'தாத்து'க்கு 'ஷ'யூனத்' கீழ்ப்பட்டிருக்கின்றன. 'தாத்து' தனது வெளியீட்டின் முறைக்கு அவற்றிற்கு ஐக்கியப்பட்டிருக்கின்றன 'முதகல்லிமீன்' ஆகிய தர்க்கவாதிகள் சொல்லுகிறபடி வெளியீடென்பது இன்மையினின்றும் ஒரு வஸ்து வெளிபடுத்துவதன்று. ஆனல் வெறும் தோற்றுவித்தலே வெளியீடாகும்.

அஸ்ராரே அனல்ஹக்

'தாத்து' ஆகிய தத்சொரூபம் 'கதீம்' என்னும் (ஆரம்பமின்றிய) பூர்வப் பெயருளாகும்; அதன் 'ஷுயூனத்தும்' பண்புகளும் 'கதீம்' ஆகிய பூர்வீகமே தோற்றம் என்பது உள்ளீட்டிலிருந்து வெளியீட்டுக்குவருதலேயாம்; இந்தமுறையில் இன்மையினின்றும் எதனையும் கொண்டு வருவதன்று. அஃயான் தங்களைத் தாங்களாகவே வெளிப்படுத்திக்கொள்ளமுடியாது. வெளிப்படுத்துபவன் அவற்றை வெளிப்படுத்தவேண்டும். இவ்வாறு வெளியீடுசெய்பவன் 'ஹக்கு'தான் 'ஹக்கு' அறிபவனும். 'அஃயானும்' வஸ்துக்களும் அறிபடுபொருள்களாயுமிருக்கின்றன; அறியப்படுபவனே அளுகிறவனுயும். அறிபவனே ஆளப்படுபவனுயுமிருக்கின்றனர்(குல்ஷன்ராஜ்) ''களா'வென்பது 'கத்ரு'க்கு உட்பட்டது; 'கத்ரு' 'ஷுயுனத்து'க்குக்கீழ்ப்பட்டது; 'களா'வென்பது வெளிப்படையாவதற்குள்ள உத்திரவு; 'கத்ரு' அறிவிலுள்ள உள்ளீடான தேவை 'தாத்து' தனது வெளியீட்டில் 'ஷுயூனைத்து'க்குக் கீழ்ப்பட்டது தாத்திலிருந்தது போன்றே அறிவினுள்ளும் 'ஷுயுனத்தா'கிய மறைமுகமான சக்திகள் உண்டாயின '' தக்தீர் ' என்பது அறிவிலுள்ள அளவு ஆகும் ஒவ்வொன்றும் அளக்கப்பட்டு பூர்வ அறிவிலே 'நிறைக்கப்பட்டிருக்கிறது அவை 'தாத்தில்' இருந்தபோன்று அறிவிலும் ஏற்பட்ட 'ஷுயூனைத்து'க்கு இந்த அளவு ஐக்கியப்பட்டிருக்கிறது வெளிப்படையில் தோற்றுவிக்கும் பூர்வ அளவை அறிதலே அறிவு ஆகும் வெளிப்படுத்தி வைக்கும் ஒருவன் ஒரு கருவியேயன்றி ஒரு செயல்கர்தாவன்றி; 'அஃயானு'டைய கையில் தான் 'தக்தீர்' இருக்கிறது 'ஹக்கு'டைய கையிலன்று. காதலன். காதலியுடைய கையிலிருக்கிறான். அவனுடைய அஃயான் ஆகிய வஸ்துக் கோலம் அல்லது அளவு அல்லது தகுதிகளின் தேவைகளுக்குத்தகவாறு 'ஹக்கு' வெளியீட்டைக் கொடுப்பதை ஆசிக்கிறான்; அவனுடைய அறிவில் அவைகளுக்கு கோலங்களைக் கொடுத்து. வெளிப்படையிலும் தோற்றுவித்து தனது சுயார்த்த அழகினது அம்சத்தை தானே வணங்கினன். இனி இந்த மூன்று கால வரையறையின்றி நடந்தேரி வந்தன; அவனேயும் சதா காலமும் அவ்வாறே தான் நடந்தேறும் தன் சொந்த கண்ணாடியாகி தன்னை அதில் தோற்றுவித்து தானே அதில் நோட்டமிட்டு அந்த நோட்டத்தின் இன்ப

வைகளையும், தானே அனுபவிக்கிறான் அங்கு 'கைர்' ஆகிய பிற வஸ்து அறவே கிடையாது.

நாட்டம் இறைவனைச் சார்ந்தது மனிதனுக்குத் தனியான சொந்த நாட்டமொன்றுங் கிடையாது உள்ளமைக்கு சக்தி ஐக்கியப்பட்டிருக்கிறது உள்ளமையற்றதுக்கு யாதொரு சக்தியுமில்லை. அவனுடைய நாட்டத்தைக்கொண்டு 'ஹக்கு' உன்னைப் படைத்தான். அந்த நாட்டம் உன்னில் வெளியிடா திருக்கிறது உன்னுடைய நாட்டத்தைக்கொண்டு நீ அவனுடைய படைப்பினமாய் ஆகவில்லை. தக்தீர் ஆகிய ஆதிகற்பனையைக் கொண்டு உனக்கு எவ்வெவற்றை கலபமாக ஆக்கப்பட்டிருக் கிறதோ அதனை நீ உன் நாட்டத்தைக் கொண்டு செய்துவிட்ட தாகக் கூறுகின்றாய். உனக்கு யாதொரு சக்தியுமில்லையென்பதை நீ உணர்வதில்லை தங்களின் செயல்களைத் தாங்களே சிருஷ்டிக் கிறவர்கள் என்று முஃதஸிலாக்கள் கூறுகின்றனர். ''வல்லாஹு கலகும் வமாத அமலூன்'' — உங்களையும், உங்களது செயல்களையும் அல்லாஹ்தான் படைத்திருக்கிறான் (குர்ஆன்) சுயேட்சையான நாட்டத்தையுடையோரான முஃதஸிலாக்களும், தலை விதியை ஸ்தாபித்து பேசும் 'ஜபரியாக்களும் அவரவர் களின்\ கொள்கைகளில் தவறுடையோர்களேயாம். ஹக்கு செயல்கர்த்தாவாயிருக்க 'கைர்' ஆகிய பிற வஸ்து சுயேட்சை யாயுமில்லை ஒரு கற்பனைக்கு கீழுமில்லை.

'அஃயான்' ஆகிய அவனுடைய தகுதிகளிலே 'கத்ரு' அடங்கியிருக்கிறது; அந்தந்த தகுதி அல்லது அளவுக்குத் தக்கபடி இடப்பட்டகட்டளையே 'களா' வெனப்படும். வேறுவகை யாகக் கூறுமிடத்து, 'அஃயான்'களை குறித்த காலத்திலும், இடத்திலும் வெளிப்படுத்தி வைக்க ஏவப்பட்ட ஆக்ஞைதான் 'களா'வாகும் 'அஃயான்' ஆகிய வஸ்து கோலங்கள் தங்கள் தங்களின் வழிப்படியும், தகுதி அல்லது அளவுக்குத் தக்கவாறும் தங்களை வெளிப்படுத்திக்கொள்கின்றன; இகற்தமாற்றமா யன்று காதானது கண்ணினுடைய தொழிலை செய்யாது. அல்லது பாதாம் பருப்புகள் திராட்சைப் பழங்களைப் போன்று ருசிக்காது பூர்வமான 'ஹக்கு'டைய அறிவுக்கு 'களா'

ஐக்கியப்பட்டிருக்கிறது 'ஹக்கு'டைய அறிவு அஃயான் ஆகிய வஸ்து கோலத்தின் தகுதிகளுக்கு ஐக்கியப்பட்டிருக்கிறது. மறைந்து கிடக்கும் வெளிப்படாத அவ்வியக்த 'அஃயான்' 'தாத்தில்' மறைந்தும் அதற்குக் கீழ்ப்பட்டுமிருக்கிறது ஒவ்வொரு வஸ்தும் தான் வியக்த (வெளிப்படுதற்கு) மாவதற்கு தத்தம். தகுதி. அல்லது அளவு என்ற நாவுகொண்டு இறைவனிடம் இறைஞ்சுகின்றது. இறைவன் அவற்றின் தேட்டங்களை பூர்த்தி செய்கிறான். "உத்ஊனி அஸ்தஜிப்லகும்" — நீங்கள் என்னிடம் கேட்பீர்களாக. நான் உங்களுக்குப் பிரதி செய்வேன். சிருஷ்டிகளுனுடைய சிருஷ்டிப்புத் தன்மையால் சிருஷ்டிக்கப்பட்டவையல்ல: 'அ·.யான்' முனில்லு (வழி கேட்டிலாக்குவோன்) என்ற திருநாமம் நெறிமுறை அல்லது ஆத்மிக சீர்கெட்டைக்கொணர்வதில்லை: 'மஹ்தீ' (நேர்வழி நடத்துபவன்) என்ற திருநாமும் நெறிமுறை அல்லது ஆத்மிக உன்னதத்தை அளிப்பதில்லை - யோக்கியதை அல்லது தகுதிகள் பூர்வீகமானவையே அவைகள்தான் 'அஸ்மா' 'சிபாத்துடைய' மூலங்கள் 'தாத்து'டைய அகமியப் பொருள்களும் அவைகளே அவை மாறுந் தன்மையுடையனவல்ல. அவைகளை 'ஹக்கு' வெளியிடாக்குகிறான். அவை அவனுடைய 'மாஹியத்து' என்னும் கடாக்ஷம். இதுவே அவனுடைய நீதி என்ற முதல் சந்தர்ப்பம் அறிவிலுள்ளபடி அந்த 'அ·.யான்' ஆகிய வஸ்த்துக்களின் அகமியங்கள் தங்கள் தங்கள் கோலங்களைப் பெறுகின்றன அவற்றின் வெளியீட்டில் 'ஹக்கு'டைய அறிவு. நாட்டம் சக்தி ஆகியவை தழுக்கிடுவதில்லை அதற்கு பகரமாக அறிவிலுள்ள 'அஃயான்' சூட்சுமமானதன்று ஆள்கிறவையாவும். 'ஹக்கு' ஆளப்பட்டதாயுமிருக்கின்றன ஹக்கு அறிபவனையும். 'அஃயான்' அறியப்பட்டவையாயுமிருப்பதைப் போன்றாற் வேளாண்மைக்காரன் ஒருவன் அநேக வித தானியங்களை அவ்வற்றின் தன்மை அல்லது தகுதிகளுக்கு தக்கவாறு வியவகரிக்கவேண்டியதாயிருக்கிறது அவர் சோளம் விளைவிக்க சோதுமை சாகுபடி செய்யும் வேலையைவிட மாற்றமானதொன்றை அவன் கடைபிடிக்கவேண்டும் இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை அவன் தெரிந்துகொள்ளாவிடில் அது விஷயத்தில் அவன் பெற்றிருக்கும் மடமையை

அது வெளிப்படுத்தும். அவற்றின் தன்மைகளுக்குத் தக்கபடி அவனுடைய அறிவு அவைகளை வெளிப்படுத்தி வைக்கும் அவற்றிலுள்ள தகுதி அல்லது யோக்கியதாம்சத்திற்கு தகுந்த படி அவைகள் உள்ளமையைப் பெறும். ''லாமுபத்தில விகலி மாத்தில் லா-அல்லாவுடைய வார்த்தைகளை ஏதும் மாற்ருது

சிலர் சுயேட்சை நாட்டம் உண்டென்ற கொள்கை யுடையோர், சிலர் யாவும் தலைவிதிப்படி திணிக்கப்படுகின்றன என்ற கொள்கையுடையோர். ஆனுர் சிலர் மட்டும் இவ் விரண்டுக்கும் நடுவான கொள்கையுடையோர் உண்மையைக் கூறுமிடத்து 'ஹக்குடைய' 'தாத்து' தனது சிபாத்துகளுடன் தன்னைக்கொண்டே தன்மீதேதான் தோன்றுவதற்கு தன்னைத் தோற்றுவித்தது. இன்மையான 'கைர்' ஆகிய பிறப்பொருளுக் காகவன்று ''லாஇி லாஹ இல்லல்லாஹ்'' அவனையன்றி நாயனின்லை.

'கைர்' என்ற பிறப்பொருள் உண்டாயிருக்கும் பக்ஷத் தில் அது ஜபரிய்யா உடைய கொள்கையை ஸ்தாபித்துவிடும் 'சாலிக்கு' சகல மதங்களையும் ஒன்றெனக் காண்கிருன். ''நிச்சய மாக நான் என்னுடைய றப்புடைய மார்க்கத்தின் பேரிலிருக் கிறேன்.'' 'சாலிக்கு'டையபார்வை'வேறு' ஆகிய பிறப்பொருளை விட்டும் நீங்கி இருக்கிறது ''இன்னகலாதஹ்திமன் அஹ்பப்த்த வலாகின்னலாஹ யஹ்தீமண்யஷாஉ'' — (ஒ. முஹம்மதே) நிச்சயமாக நீர் நேசிப்பவர்களை உம்மால் நேர்வழியிலாக்க முடியாது. ஆனுல் இறைவன் தான் நாடியவர்களை நேர்வழியி லாக்கக்கூடியவன். ''மன்யஹ்தியல்லாஹு வலா முளில்லலஹு வமன்யுளில்ஹு பலா ஹாதியலஹு'' — அல்லா யாரை வழி கேட்டிலாக்குருனே அவனை உம்மால்நேர்வழிலாக்க முடியாது; எவனை அல்லா நேர்வழி நடத்துகிருனே அவனை உம்மால் வழி கேட்டிலாக்க முடியாது 'சாலிக்கு' உண்மையின்பால் மீளும் பொழுது சம்பந்தா சம்பந்தங்கள் மறைந்துவிடுகின்றன அவ் வேளை அவன் 'ஹக்கை'யாதொரு சாதன உதவியுமின்றி ஹாதி யாக இருக்கக் காண்பான்

19-வது அத்தியாயம்

(தனாசுக் — புனர் ஜென்மம்)

மனிதனின் ஆன்மா தன்னைக்கொண்டு தானே போதுமானதல்லவென்றும், மரணமும் நாசமும் அதனை மிகைத்துவிடுவதில்லையென்றும் சிலர் நம்புகின்றனர் எனவேதான் அபிமானித்திருந்த ஒரு ஸ்தூல சரீரமானது மரித்துவிடுங்காலை அது மற்றொன்றைத் தேடி நிற்கின்றது ஆகவே ஆன்மா தனது முந்திய தொடர்புகளை நீக்கிக்கொண்டு கேவலமான அல்லது உன்னதமான எந்த சரீரமாயினும் அதில் தன்னைத் தோற்றுவித்துக்கொள்கிறது அதுவோ ஒரு புஸ்த்தகத்திலுள்ள வாசகங்களை ஒரு காகிதத்திலிருந்து மற்றொரு காகிதத்தில் எழுதுவதை போன்றும் 'குல்ஷன் ராஜு'வுடைய (ஷைய்கு மஹ்மூது சபிஸ்தரீ அவர்கள்) கூறுவதாவது: "மறு பிறவி யென்பது 'குப்ரும்' பொய்யுமாகும்: ஏனெனில் அது ஒரு குறுகலானகொள்கையே" புனர் ஜன்மவாதிகளின் குறுகிய கொள்கை தங்களை ஸ்தூல சரீரங்களில் மட்டும் அடக்கிக்கொண்டு சூட்சும லோகத்தை அறவே புறக்கணித்துவிடுவதிலும், நற்கருமங்களுக்காகவேண்டி ஆன்ம லோகத்தில் நபிமார்கள் கண்டபடி ஆன்மா அடையும் பதவி முன்னேற்றத்தை நம்பாததிலும் ஏற்படுகின்றது.

இரண்டாவதாக அவர்கள் ஆன்மாக்கள் பூர்வமானவைகளென்றும், ஒரு குறித்த எண்ணிக்கையை மட்டும் உடையனவென்றும், அவைகள் மாறி மாறி பல்வேறு சரீரங்களில் சுற்றி வருகின்றனவென்றும் கூறுகிறார்கள் ஒவ்வொரு விநாடியும் ஒரு புதிய 'தஜல்லியும்' தோற்றமும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிவதில்லை, 'ஹக்கு'டைய தஜல்லியாத்து எண்ணற்றனவாதலால் அவைகள் தங்களை மீண்டும், மீண்டும் தோற்றிக்கொள்வதில்லை மூன்றாவதாக ஆன்மாக்கள் சரீரங்களுக்கு ஐக்கியப்பட்டவையன்று என அவர்கள் உணர்வதில்லை "சரீரமின்றிய சரீரத்தையுடைய அது நீயாயிருக்கின்றாய்; நாம் மரணித்துவிடப் போகிறோமோவென்று நீ ஏன் பீதிகொண்டிருக்கிறாய்?" (மத்னவீ)

நான்காவதாக, ஆன்மா ஒரு ஸ்தூல சரீரத்தைவிட்டு வெளிப்படுவதும், உட்புகுவதுமான ஒரு வஸ்த்துவல்ல ஆன்மா மற்ரெரு சரீரத்தினின்றும் வெளிப்பட ஒரு சடப்பொருளன்று. ஐந்தாவதாக ஆன்மா ஆதிக்கஞ் செலுத்துவதாயும், அதன் ஆதிக்கம் நன்மையோ. தீமையோ ஒரு சரீரத்தில் மட்டும் செலுத்தப்படுவதாயுமிருக்கிறது '' லஹா மாகஸபத் வ அலைஹா மக்தஸபத் '' — நன்மைகளில் நின்றும் சேகரித்தவையே அதற்கும் தீமைகளில் நின்றும் சேகரித்தவையே அதன் பேரிலுமாகும். '' இவ்வுலகினின்றும் தனக்காக ஒருவன் அனுப்பி வைத்துக்கொள்ளும் கோலங்கள்தான் நரகமும் சுவர்க்கமுமாகும். அவைகள் அவனுக்காக சூட்சும லோகத்தில் காத்துக்கொண்டிருக்கிறன. பலா பலன்களை அடையப்பெற ஒருவன் இவ்வுலகிற்கு மீண்டும் திரும்புவது கிடையாது.

20-வது அத்தியாயம்

இர்ஷாதாத் — பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்.

நீ தாடி வளர்த்துக்கொண்டு ஒரு அவிசுவாசியாக ஆய்விட்டாய். தாடியின்றிய ஒரு காபிர் மெய்யானதோர் முஸ்லிமாயிருக்கிறுன் ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளும் உடைய முஸ்லிம் தன்மையின் பேரிலேயே பிறக்கிறது — ஒரு குழந்தை முஸ்லிமாகவே இருக்கிறது வளர்ச்சியடையும்போதுதான் அதன் வழி பாடும், செயல்களும் அதனை ஒரு 'காபிரா'கச் செய்துவிடுகின்றன '' குல்லு மௌலூதின் யூலது அலா பித்ரதில் இஸ்லாம். ''

ஜனங்கள் தடை பண்ணப்பட்ட மரத்தைப்பற்றி பல்வேறு அபிப்பிராயங்கொண்டிருக்கின்றனர் சிலர் அதனை அத்தி மரம் என்றும், சிலர் திராட்சை மரமென்றும், சிலர் முஷாஹதாவென்னும் தெரிசனையுடையோர் நெறுங்கிச் செல்ல வியலாத 'அறிவு' என்னும் விருக்ஷம் என்றும் பலவாருய் அபிப்

பிராயப்படுகின்றனர். 'நான்' என்னும் மரம் என்று சிலர் கூறுகின்றனர் நப்ஸு என்னும் மரம் என்றும். காதல் (உலகப்பற்று) என்னும் மாம் என்றும் சிலர் சொல்லுகின்றனர்.

யதார்த்தமாக இன்மையாகியதோர் கற்பனையான பிரிவினையின் பட்டப் பெயரே 'இப்லீஸ்' எனப்படும். ஒரு வஸ்து தனது அகமியத்தினின்றும் தன்னைப் பிரித்துக்கொண்டு தனக்கே ஒரு 'கைர்' ஆகிய வேற்றுப் பொருளாக ஆக முடியாது ஒரு மனிதன் ஒரு மனைவியின் ஆடைகளை அணிந்துக்கொண்டு, தான் ஒரு பெண்ணென கற்பித்துக்கொள்கிறான்; அல்லது, ஒரு மனைவி ஒரு மனிதனின் உடைகளைப் போர்த்திக்கொண்டு தன்னை ஒரு மனிதனை பாவித்துக்கொள்கிறாள் கற்பனையில் மட்டுமேயன்றி யதார்த்தத்தில் அவன் தன்னைவிட்டும் தன்னைப் பிரித்துக்கொள்வதில்லை இந்த வேற்றுமை அல்லது பிரிவனையாகிய கற்பனைதான் 'ஷைத்தான்' எனவும், 'இப்லீஸ்' என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த கற்பனை ஒரு கோலத்தைப் பெறுகின்றது உதாரணமாக, யதார்தத்திலேயே இல்லாவிடினும் கனவிலே ஒரு கோலம் தோற்றுவது போன்றும்.

நாற்பது காலைப்பொழுதுகள் 'ஹக்கு' தனது சொந்த கைகளால் ஆதம் (அலை) அவர்களுடைய மண்ணைப் பக்குவப் படுத்தினான். ஓர் அரசன் ஒரு அரண்மனையை கட்டுங்காலை அந்த வேலையை சிற்பிகளிடம் ஒப்புவிக்கிறான். ஆனல் 'கஜானா' வறையை மட்டும் கட்டும்பொழுது அந்த இடத்தின் மர்மத்தைத்தானே மறைத்து வைத்துக்கொள்கிறான் இறைவன் இவ்வுலகை தனது 'குன்' என்ற கட்டளையைக்கொண்டு சிருஷ்டித்தான் " இன்னமா அம்ருஹு இதா அராதஷைஅன் அன்யகூல லஹு குன்பயகூன் " 'ஹக்கு' ஒரு வஸ்தைப் படைக்க நாடின பொழுது அவன் அதனைப் பார்த்து குன் - (ஆகு) என்று கூற அது உண்டாகிவிடுகின்றது ஆதம் (அலை) அவர்கள் விஷயத்தில் அவன் அவர்களுக்கு சொல்லையும் செயலையும் ஏகப்படுத்தினான் இந்த விஷயத்தில், காதல் என்னும் பொக்கிஷத்தையும் 'இர்பான்' என்ற ஞானத்தையும் ஆதமில் மறைத்து வைக்க அவன் நாடினான்; எனவே அவன் இரு கரங்களையுங்கொண்டு

ஆதமைப் படைத்தான் 'ஜிப்ரயீல்,' 'மீக்காயீல்,' இஸ்ராபீல் ஆகியோர் பூமியினின்றும் ஒரு பிடி மண் அள்ள சக்தி பெறாதவர்களாயிருந்தார்கள். ஏனெனில், மண் இறைவனை அடுத்து நெருங்குதற்கு சக்தி பெறாதிருந்தது அதனுடைய பல்வேறு பாகங்களிலிருந்தும், இஸ்ராயீல் ஒரு பிடி மண்ணை அள்ளிக் கொண்டார்கள். எனவே மனிதர்கள் பல்வேறு நிறத்தவர்களாயிருந்தனர்.

ஆகாயங்களும், மண்டலங்களும் சுழல ஆரம்பித்த போது முதல் நாளாக தோற்றியது சனிக்கிழமையாகும்.

அநேகம் என்ற திரையின்கீழ் 'ஏகம்' என்ற உள்ளமையை மூடி வைப்பதே 'குப்ரு' எனப்படும் 'ஷிர்க்கு' என்பது ஒரே யதார்த்த உள்ளமையை இரண்டாகக் கருதுவதேயாம். 'ஷரீஅத்து'டைய 'குப்ரு'ம் 'ஷிர்க்கு'மாகிறது பாவங்களினின்றும் அசுசியத்தை அடைதல்; 'தரீகத்து'டைய 'குப்ரும்' 'ஷிர்க்கும்' உலகப்பற்று; 'ஹகீகத்து'டையதோ அநேகத்தன்மை மறைவில் ஏகமாய் தோன்றியிருப்பதைப் பாராது. 'கைர்' ஆகிய வேற்றுப்பொருளை நிலைநாட்டுவதாகும் 'வயிலாஹு'கும் இலாஹுன் வாஹிது' — மெய்யாக உங்கள் நாயன் ஒருவனேயாம்.'' ''வமாயுஃமினு அக்தாரஹும் பில்லாஹி இல்லாவஹும் முஷ்ரிகூன்'' — (அவனுடன்) இணையாக யாரையும் சேர்க்காமல் (மக்களுள்) அநேகர் அல்லாஹ்வை விசுவாசிப்பதில்லை' இந்த 'ஷிர்க்கு' எளிதில் பார்வைக்கு அகப்படுவதன்று சகல நிலைகளிலும் முன்னேற்றமடைந்து வரும் ஜனங்களில் அது மறைந்துகிடக்கின்றது ஏனெனில் அது 'ஹக்கு'டைய பண்புகளுள் ஒன்றாகும். அது முளில்லு (வழி கெடச் செய்வோன்) 'முதில்லு' (தாழ்மையாக்குவோன்) என்ற திருநாமங்களான இஸ்மூகளின் தோற்றமாகும்

பிரதிபிம்பம் என்பது கண்ணின் ஒளி கிரணங்கள் கண்ணாடியின் மேற்பரப்பிலிருந்து கண்ணின்பால் திருப்புதலாகும். கண்ணாடியின் பின்புறத்திலுள்ள இரசப் பூச்சு கிரணங்களை கண்ணாடியின் வழியாகப் பிறிச் சென்றுவிடாதபடி தடுத்து

திரும்ப அந்த கிரணங்களை வந்தவிடத்திற்கு அனுப்பி விடுகின்றது அந்த கண்ணாடியில் கண்ணுடைய பிரதிபிம்பம் இருக்கிறதென்று சொல்வது தவறு. ஒருவனது கற்பனையிலேயே அது இருக்கிறது அது ஒரு நினைவின் கோலமாகும்.

'ஹிஸ்ஸெ முஷ்தரிக்' என்னும் பொது அறிவு புறக் காரணங்களைந்தையும். அக்காரணங்கள் ஐந்துடன் சேர்ப்பிக்கும் ஓர் அறிவு. சிலர் கண்தான் பார்க்கிறது, ஆனால் அது பகுத் தறிவதில்லை என்று கூறுகிறார்கள் அது 'ஹிஸ்ஸெ முஷ் தரிக்'குடைய தொழிலாகும் ஐந்து புற இந்திரியங்களும் அதனுள் பாய்கின்றன. அது ஓர் குளத்தைப் போன்றிருக் கிறது பின்னர் அங்கிருந்து அவைகளை ஐந்து அக இந்திரியங் களின் பல்வேறு வாய்க்கால்களுக்குக் கொண்டு போகப் படுகின்றன.

உனது நாசித் துவாரங்களில் நாற்றம் வீசக்கூடிய தூசி அசுத்தம் ஆகியவற்றைவிட்டும் நீ விரண்டோடிவிடு. மேலும் கந்த நறுமணங்களை மட்டும் உட்கொள்வாயாக துர்வாடைகளும் ஒரு பன்றியுடைய தோற்றமாயிருப்பதால் அதனை விட்டும் உன் மூக்கை வெறுப்புக்கொண்டு திருப்பிக் கொள்ளாதே ஆனால் அந்த வெறுப்பும் ஷரீஅத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தால் அது இறைவனது கட்டளை.

'ஹக்கி'னால் சிருஷ்டிக்கப்பட்ட கோலத்தை 'ஹக்கு'டைய கல்லினாலேயே தகர்த்துவிடு. நண்பனுடைய கல்லை அவனது கண்ணாடி விளக்கின் மீது எறிந்துவிடுவாயாக (மத்னவி)

இந்த கொள்கையின் அடிப்படையில்தான் ஜிஹாத் தைக்கொண்டு சத்தியத்தை பரப்பி வைக்கவும் விக்கிரஹங் களைத் தகர்க்கவும் ஷரீஅத்தினால் அனுமதிக்கப்பட்டது இந்த கொள்கையை எவன் நிராகரிக்கிறானோ அவன் ஹக்குடைய கட்டளையை நிராகரித்தவனாகும்

இர்ஷாதாத் — பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்.

ஏழ்மைத்தனம் இரு வகைப்படும் அவை யாவன:— வெளிப்படை அந்தரங்கம் என்பனவாகும். முதலாவது, ஆஸ்தி பூஸ்திகளின்மை; இரண்டாவது தாத்து, சிபாத்துடைய கற்பனை இன்மையாயிருத்தல். இன்மைசெய்தல் முடிவடைந்ததும், உள்ளமை தொடங்கிவிடுகின்றது. 'அஸ்ஸூபிலம்யுக்லக்' — சூபியாகிறவன் சிருஷ்டிக்கப்பட்டவனன்று.

ஜனங்கள் ஒன்று என்று கூறியபோதிலும் அவர்கள் அநேக கதவுகளில் தொங்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த மனிதனிடமிருந்தும் அந்த மனிதனிடமிருந்தும் எதிர்ப் பார்த்த வண்ணமிருக்கின்றனர் 'சூபி' ஒன்று என்று சொல்லுகிறார். ஆனால் அவரோ தனது சொந்தசங்கையைவிட்டும் ஓடிவிடுகிறார்.

உலகம் என்ற வார்த்தை எந்த ஒரு குறித்தப் பொருளையும் கருதுவதன்று. இம்மையை பொருத்ததாயினும், அல்லது மறுமையை பொருத்ததாயினும் எந்த ஒன்றின்பால் நீ உன் மனதை செலுத்துகின்றாயோ அதுவே உலகம் எனப்படும் அது 'மாஸிவல்லாஹ்' வாகிய 'அல்லாஹ்' வின் வேறு எனப்படும்.

ஆதமுக்கு 'ரூஹு' ஊதப்பட்டதும் அவர்கள் ஓர் தும்மலுடன் 'அல்ஹம்து லில்லாஹ்' — அல்லாஹ்வுக்கே புகழ் யாவும் என்றார்கள். அதற்கு பிரதி மொழியாக இறைவன் "யாறஹ்மக்கறப்பிக" — உன்னுடைய றப்புடைய கிருபை உன் மீதுஉண்டாகுக என்று அருளினான்.

எவனொருவன் சகலவஸ்துக்களையும் உணர்ந்து தன்னை மட்டிலும் உணராதிருக்கிறானோ அவன் ஒரு மாபெரும் மூடனாகும். எவன் தன்னை உணர்ந்து, மற்ற வஸ்துக்களை உணராதிருக்கிறானோ அவன் ஓர் தீவிரவிவேகி. 'மன்அரப நப்ஸஹூ பகத்அரபறப்பஹூ' யார் தன்னை உணர்ந்தானோ அவன் தன் நாயனை உணர்ந்தவனாகும்

அஸ்ராரே அனல்ஹக்

"ஏ கலக்கமுடைய மனிதா! எவ்வளவு காலம் நீ உன் வாழ்நாளை சவச்சாலையை தெரிசிப்பதில் களிப்பாய்? ஒரு ஆரிபு ஆகிய ஞானிக்கோ ஒரு உயிருள்ள பூனை ஓராயிரம் மரித்த சிங்களைவிட சிறந்ததாகும்."

கபடமின்மையாவது யாது? துன்பத்தில் இன்பத்தைப் பெறுதல் என்று ஒருவர் சொல்லுகிறார். மற்றொருவர், துன்பத்திற்குத் தலைசாய்த்தல் என்று கூறுகிறார். ஆனால் 'ருபியத்துல் பஸரிய்யா' (றலி) அவர்களோ துன்பத்தில் தன்னை இன்மையாக்கிக்கொள்ளுதலாகும் என்று அருட் செய்திருக்கிறார்கள். மனிதனே 'அதம்' என்னும் இன்மையாகும். ஆகலின் எந்த துன்பமும் ஒரு 'அதம்' ஆகிய இன்மையின்பால் வீழமுடியாது. அது அதனை உணராது.

'ஹக்கு' தனது நேசர்களுக்குக் கீழ்வரும் துவக்கத்தையுடைய ஒரு அனுமதிச் சீட்டை அளிப்பான். அதாவது:— "மினல் ஹய்யில்லதீலாயமூத்து இலல் ஹய்யில்லதீலாயமூத்து" மரணமற்ற ஜீவிப்புடையோனிடமிருந்து மரணமின்றிய ஜீவிப்புடையவனுக்கு" என்றும், "மினல் அஜீஸில்லதீலாயதாலு இலல் அஜீஸில்லதீலாயதாலு" — "தாழ்மைப்படுதலின்றிய மகிமை வாய்ந்தவனிடமிருந்து தாழ்மையடைதலின்றிய மகிமை வாய்ந்தவனுக்கு" என்றும் பொருள்படக்கூடிய துலக்கத்தை அந்த அனுமதிச் சீட்டு பெற்றிருக்கும்.

ஒளலியாக்களை பாவங்களினின்றும் இறைவன் பாதுகாப்பதை 'ஹிப்ளு' என்றழைக்கப்படுகிறது. அவ்வாறு நபிமார்களைப் பாதுகாப்பதை 'இஸ்மத்' என்று அழைக்கப்படுகின்றது. பாதுகாத்தலென்பது ஒரு பாவம் மீண்டும் நிகழவிடாது பார்த்துக்கொள்ளலேயாம் ஏனெனில் விரும்பாமலேயே ஒரு வலியிடம் ஓர் பாவம் நிகழக்கூடும் ஆனால் அவர்கள் அதனை வேண்டுமென்றே செய்ததன்று (சம்ஞன் குடும்பத்தைச் சேர்ந்த 'புகாரா'வின் 'சூபி' அமீரான) செய்கு அலாவுக் தௌலா சம்னானி அவர்கள், "ஒருவன் தான் பாவியாகிவிட்டேன் என்று சொல்லிக்கொள்வதைவிட பெரிய தோர் பாவம் யாதொன்றுமில்லை என்று கூறியிருக்கிறார்கள்

இர்ஷாதாத் — பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்

பூரா உலகமும் 'ஹராம்' ஆகிய விலக்கப்பட்ட வஸ்துக்களால் நிரம்பியிருந்தபோதிலும் 'முஃமின்' ஒருவனுடைய கையில் வருவதெல்லாம் 'ஹலால்' ஆன அனுமதிக்கப்பட்டவையேயாம்.

'' எழுத்துக்கள், வார்த்தைகள், 'இஸ்முகள்' யாவும் 'இல்மெ-சீமியா' வென்னும் ஜீவ வசிய சாஸ்திரத்தின் அடையாளங்கள்'' என்று ஷெய்குல் அக்பர் (ரலி) அவர்கள் அருளியிருக்கிறார்கள். சில ஜனங்களின் விஷயத்தில் பிஸ்மில்லாஹ் என்ற சொல்லானது சகல 'அஸ்மா' வினுடைய வேலையையும் செய்கின்றது. அவர்களுடைய நிலையில் சகல கதவுகளுக்கும் பிஸ்மில்லாஹ்தான் திறவுகோலாயிருக்கிறது.

அப்துல்ஹஸன் அவர்கள் ஜுனைது (றலி) அவர்களிடம் '' ஒருவனுடைய உள்ளம் எப்பொழுது பூரிப்படைகிறது '' என்று கேட்டதற்கு ''மனமானது மனதிலேயே தரிபட்டிருக்கும் பொழுது மனம் சந்தோஷத்தையடைகின்றது'' என்று ஜுனைது (றலி) அவர்கள் பதிலிறுத்தார்கள். ஷெய்குல் இஸ்லாம் அவர்கள், ஒருவன் தெரிசிப்பவனையும், ''அந்த தெரிசனையில் ஹக்கு பிரசன்னமாயுமிருக்கும்பொழுது ஒருவனது மனம் பூரிப்படைகின்றது'' என்று கூறியிருக்கிறார்கள். 'உஜூஹுன் யௌமஇதின் நாளிரத்துன் இலா றப்பிஹா நாளிரா'' — ''அவர்களுடைய நாயனைப் பார்த்ததாக சில வதனங்கள் அந்த நாளிலே மிகுந்த பிரகாசத்தைப் பெற்றிருக்கும்'' ஒரு சூபியோ வெளிப்படையில் 'பந்தா'வாகிய அடிமையாயும் உள்ளீட்டில் 'ஹக்கு' ஆயுமிருக்கிறார்.

துன்னூனுல்மிஸ்ரீ (றஹ்) அவர்கள் தாத்தில் நோட்டமிடுதல் 'ஜஹ்லு' என்னும் மடமையாகும்; அவனை சுட்டிக்காட்டுதல் 'ஷிர்க்கு' ஆகிய இணை வைத்தலாகும் என்று அருளியிருக்கிறார்கள்.

ஒரு சேவல் முதல் இரு ஜாமங்களில் கூவுமேயானால் அது உடனே அறுக்கப்படவேண்டியதே; இல்லாவிடில் அத்தேசத்து அரசன் இறந்துவிடுவான் அல்லது ஏதேனுமோர்

அபாயம் அத்சோத்துக்கு ஏற்படும். 'ஹால்' ஆகிய பரவச அனுபவ நிலை கிடைக்காத வேளையில் பேசுவதிலீடுபட்டிருக்கும் 'சூபியும்' இதே கெதியை அடைக்கூடியவரே. நீ ஜீவத் தன்மையுடன் எதெதனைச் சொல்லுகிறயோ அது யாவும் நேரங்கெட்ட வேளையில் கூவும் சேவலைப் போன்றும்.

சகலவற்றிலும் 'ஹக்கைத்' தெரிசிக்கும் 'ஷாஹூது'டைய நிலையை அடையப்பெருத சாதாரண ஜனங்கள் நாவாலும், மனத்தாலும் தீமையை மறுக்கிருர்கள். ஆனல் சதா தெரிசனையைப் பெற்றிருப்போர் உள்ளத்தில் அதனை மறுப்பதில்லை. 'ஹக்கினுல்' செய்யப்பட்ட சித்திரவேலையை 'ஹக்கு'டைய உத்திரவுகொண்டே தகர்த்துவிடு. நண்பனின் கல்லையே நண்பனுடைய கண்ணுடி விளக்கின் மீதுவிட்டெறிந்துவிடு. இதுவோ 'ஹக்கை'க்கொண்டு 'ஹக்கை' மறுப்பதாகும். அதுபூர்ணமான மறுப்பாகாது. தங்களுடைய மார்க்க யுத்தங்களாலும் குற்றவாளிகளைத் தண்டித்தாலும் தீர்க்கதரிசிகள் அல்லாஹ்வைத் தெரிசிப்பதின்றும் திரையிடப்படவில்லை. அவர்கள் யுத்தகளத்தில் போரிட்டதும், கொன்றதும் 'அல்லாஹ்'வுக்காகவேயிருந்தன. 'தஜல்லியாத்து' மிகைத்தபொழுது அவர்கள் 'ஔலியாவ'ாக ஆகின்றனர். 'மஜ்தூப்' ஆகிய பரவசத்தில் சொக்கிய காக்கமுடையோருக்கிருப்பதைப் போன்றே இவர்களுக்கும் சகல தடைகளும் நீக்கப்படுகின்றன. அந்த நிலையில் மிகசமீபித்தவரானவர்கள்கூட அவர்களுக்கும், ஹக்குக்குமிடையிலுள்ள காரியாதிகளில் குறுக்கிடுவதில்லை. 'லாயஸ் அனிபீஹி மாகிருன் முகர்ரபுன்' 'ஷரீஅத்து'டைய சட்ட திட்டங்களுக்கு மஜ்தூபீன்கள் ஐக்கியப்பட்டவர்களன்று. அவர்கள் தங்கள் நிலையிலின்றும் கீழிறங்குபவர்களல்ல. ஆயினும், 'ஜுஉல் ஜும்ம'க்கு எஜமானாகிய ஒரு 'ஆரிபுக்கு' ஏற்றமும், இறக்கமும் உண்டு. இந்த நிலை தற்காலிகமானதே.

'கைர்' ஆகிய பிறப் பொருளை உணர்த்த சகல 'கத்ராத்' என்னும் ஊசாட்டங்களைவிட்டும் மனதை சுத்தப்படுத்துவதே 'தௌஹீது' என்னும் அத்வைதமாகும்.

இர்ஷாதாத்—பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்

ஷெய்குல் அக்பர் அவர்கள் ' மஜ்தூப் ' ஆகிய பரவச நிலையில் சொக்கிய சாக்கமுடையோர் ஒளியினுலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிருர்; பைத்தியக்காரர் இருளாலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிருர். மிருகாதிகளுக்கும் ஒளியினுலான ' கஷ்பு கிடையாது. ' என்று அருளியிருக்கிருர்கள்.

" மன்தஷப்பஹ பிகௌமின் பஹுவமின்ஹும் " (ஹதீது) ஒருகூட்டத்தினருக்கு ஒப்பான ஒருவர் அவர்களினின்றும் ஒருவராகவே ஆகிருர் ஷெய்குஷ ஹாபுத்தீன் சுஹ்ரவர்த்தி அவர்களுடைய ' அவாரி புல்மஆரிபு ' என்னும் கிதாபில், ஒரு கூட்டத்தவருக்கு ஒப்பாகி அவர்களுடைய நெறி முறைகளை யும், நடத்தைகளையும் ஒருவர் கடைபிடித்தால் இம்மையிலும். மறுமையிலும் அவர்களைப்போன்றே அவர் ஆய்விடுகிருர் மலைக் குகையில் தூங்கிய ஏழுபேருடைய நாயும் நியாயத் தீர்ப்பு நாளில் மனித கோலத்தில்தான் எழுந்திருக்கும், ஒருவருடைய மகனுன பஅலம் " 'பஅலம்'பின் ஓர் நாயுடைய கோலத்தைப் பெறுவான்.

மனிதர்களுக்கு கொடுப்பதிலன்றி அவர்களிடமிருந்து பறித்துக்கொள்வதில் தைரியம் ' என்பது இல்லை 'அல்லாஹ்' வின் நண்பர்களுக்கு காட்டப்படும் வெளியரங்க மரியாதை 'அல்லாஹ்'வுக்கே அந்தரங்கத்தில் காட்டப்படும் மரியாதை யாகும் என்று அப்துல் ஹாபிஸ் கூறுகிருர்கள்

' குல்லுஷையின் ஹாலிகுன் இல்லா வஜ்ஹஹு ' அவனுடைய ' முகம் ' நீங்கலாக ' ஷைர் ' ஆகிய ஒவ்வொரு வஸ்தும் நாசத்தையுடையதேயாம், ' கஷ்பு ' டையவர்கள் அந்த ' இன்மை ' யை இம்மையிலேயே பார்க்கிருர்கள். திரையிடப்பட்டவர்களோ அதனை மறுமையில் வாக்களிக்கப் பட்டிருக்கிருர்கள். (கடந்த, நிகழ், வரும்) காலத்தினவாகிய ஏதும் முக்காலத்தும் இன்மையாயிருப்பதால் இன்மையாக்கபட வேண்டிய அவசியத்தைப் பெறுவதன்று இந்த பிரபஞ்சத்தின் இன்மை முக்காலத்தும் தரிபாட்டுடனிருக்கும் 'ஹக்கு'டனே

ஒப்பிடப்படுகிறதன்றி ஏதுமில்லை. பூர்வீகமாயும் சதா காலமும் நீடிப்பவனாயும் 'ஹக்கு' இருக்க வஸ்துக்கள் அந்த அம்சங்களைப் பெறுவதில்லை. 'ஹக்கு' இன்றிய யாவும் 'மித்தை' யாகிய பொய்யும். இன்மையுமாம் 'மும்கின்' ஆகிய இடம்பாடுடையது எப்பொழுதும் இன்மையின் அஸ்திவாரத்தையே பெற்றிருக்கின்றது. '' யுக்ரிஜுல்ஹைய மினல் மையிதிவயுக்ரிஜுல்மை யிதமினல்ஹையி ''

அவன் மரணித்தவற்றை உயிர்ப்பிக்கிறான்; உயிர் பெற்றவற்றை மரணிக்கச் செய்கிறான். அதாவது :

1) பார்வைக்கு மரித்துவிட்டதாக தோன்றும் இறந்த கிருமியினின்றும் அவன் உயிர்ப்பிக்கிறான். ஜீவிப்புடனிருக்கும் மனிதனை இறந்த மனிதனாகச் செய்கிறான்.

2) அவன் மூடன் ஒருவனை விவேகியாகச் செய்கிறான். விவேகியை மடையனாக்குகின்றான்.

3) 'பனா' விலின்று 'பகா' அளிக்கிறான்; 'பகா' வினின்றும் 'பனா'வைக் கொடுக்கிறான்.

4) அகண்ட பரிபூர்ணத்திலிருந்து கண்டத்தைக் கொணர்கிறான். கண்டத்தினின்றும் அகண்டத்தை அளிக்கிறான்.

5) 'அஸ்மா இலாஹி' யிலிருந்து 'அஸ்மாகியானி' யையும், 'அஸ்மாகியானி'யிலிருந்து அஸ்மா இலாஹியையும் கொண்டு வருகிறான்.

சம்பூர்ணம் !

அல்ஹம்துலில்லாஹ்!

ஹிஸ்புல் பஹ்ரு ளாஹிர் பாத்தின் மஃனாவின் சுருக்கம்

★ – ★

1. என்னிலிருக்கும் "நான்" என்னும் தெய்வத் தன்மை தானாக இருந்து தொடங்குகிறேன். சர்வ ஜீவன்களிலும் தானே சாக்ஷியாக இருந்து தனக்குத் தான் கிருபை செய்பவன். தன் உள்ளமைக்கு நேர்பட்டவர்களை தன்மயமாக்குவதில் பிரத்தியேக தயாளன்.

2. பராபரமே! மேலாப்பரமானவனே! மகத்துவம் நிறைந்தவனே! சர்வ சகிப்பானனே! சர்வ அறிவு மயமானவே!

3. நீயே என்னுடைய இறைவன். நீ அறிவுமயமாய் என்னில் நிறைந்திருப்பதுவே எனக்குப் போதும். எனது இறைவனே நல்லவன். சர்வத்திலும் எனக்குப் போதுமானவனாக இருக்கும் அவனே நல்லவன் அல்லாஹ்வே! எங்களுடைய நாட்டங்களுக்கு நீயே காரணஸ்தன். உதவி வேணுமென்ற நாட்டத்தை நீயே எங்களுக்குப் போடுகிறாய் இன்னும் அவ்வுதவியை நீயே செய்கிறாய். நீயே சர்வத்தையும் மிகைத்தவன் உன் உள்ளமைக்கு நேர்பட்டவர்களை உன்மயமாக்கும் தயாளன்.

4. எங்களுடைய அவயவங்களிலிருந்து வெளியாகும் அசைவுகள், அமைதிகள், எங்கள் வாயிலிருந்து புறப்படும் சொற்கள், எங்கள் உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்கள், நினைப்புகள் ஆகியவைகளுக்கு நீயே காரணஸ்தன்.

அபாயம் அச்கேசத்துக்கு ஏற்படும் 'ஹால்' ஆகிய பரவச அறிவு நிலை மிகைக்காத வேளையில் பேசுவதிலீடுபட்டிருக்கும் 'சூபியும்' இதே கெதியை அடைக்கூடியவரே. நீ ஜீவத் தன்மையுடன் எதைதனைச் சொல்லுகிறயோ அது யாவும் நேரங் கெட்ட வேளையில் கூவும் சேவலைப் போன்றும்.

சகலவற்றிலும் 'ஹக்கைத்' தெரிசிக்கும் 'ஷுஹூது' டைய நிலையை அடையப்பெறாத சாதாரண ஜனங்கள் நாவாலும், மனத்தாலும் தீமையை மறுக்கிறார்கள் ஆனால் சதா தெரிசனையைப் பெற்றிருப்போர் உள்ளத்தில் அதனை மறுப்பதில்லை 'ஹக்கினால்' செய்யப்பட்ட சித்திரவேலையை 'ஹக்கு'டைய உத்திரவுகொண்டே தகர்த்துவிடு தன்பானின் கல்லையே நண்பனுடைய கண்ணாடி விளக்கின் மீது விட்டெறிந்துவிடு இதுவோ 'ஹக்கை'க்கொண்டு 'ஹக்கை' மறுப்பதாகும். அதுபூரணமான மறுப்பாகாது. தங்களுடைய மார்க்க யுத்தங்களாலும் குற்றவாளிகளைத் தண்டித்தாலும் தீர்க்கதரிசிகள் அல்லாஹ்வைத் தெரிசிப்பதின்றும் திரையிடப்படவில்லை அவர்கள் யுத்தகளத்தில் போரிட்டதும், கொன்றதும் 'அல்லாஹ்'வுக்காகவேயிருந்தன 'தஜல்லியாத்து' மிகைத்தபொழுது அவர்கள் 'ஔலியாவ்'ாக ஆகின்றனர். 'மஜ்தூப்' ஆகிய பரவசத்தில் சொக்கிய காக்கமுடையோருக்கிருப்பதைப் போன்றே இவர்களுக்கும் சகல தடைகளும் நீக்கப்படுகின்றன அந்த நிலையில் மிகசமீபித்தவானவர்கள்கூட அவர்களுக்கும், ஹக்குக்குமிடையிலுள்ள காரியாதிகளில் குறுக்கிடுவதில்லை. 'லாயஸ் அனிபிஹி மலிகுன்முகர்ரபுன்' 'ஷரீஅத்து'டைய சட்ட திட்டங்களுக்கு மஜ்தூபின்கள் ஐக்கியப்பட்டவர்களன்று அவர்கள் தங்கள் நிலையிலின்றும் கீழிறங்குபவர்களல்ல ஆயினும், 'ஜம்உல் ஜம்உ'க்கு எஜமானராகிய ஒரு 'ஆரிபுக்கு' ஏற்றமும், இறக்கமும் உண்டு இந்த நிலை தற்காலிகமானதே

'கைர்' ஆகிய பிறப் பொருளை உணர்த்த சகல 'கத்ராத்' என்னும் ஊசாட்டங்களைவிட்டும் மனதை சுத்தப் படுத்துவதே 'தௌஹீது' என்னும் அத்வைதமாகும்.

இர்ஷாதாத்—பலதிறப்பட்ட பொருக்கு மணிகள்

ஷெய்குல் அக்பர் அவர்கள் ' மஜ்தூப் ' ஆகிய பரவச நிலையில் சொக்கிய சரக்கமுடையோர் ஒளியினாலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிறார்; பைத்தியக்காரர் இருளாலான 'கஷ்பை'ப் பெற்றிருக்கிறார். மிருகாதிகளுக்கும் ஒளியினாலான ' கஷ்ப கிடையாது. ' என்று அருளியிருக்கிறார்கள்.

" மன்தஷப்பஹ பிகௌமின் பஹுவமின்ஹும் " (ஹதீது) ஒருகூட்டத்தினருக்கு ஒப்பான ஒருவர் அவர்களினின்றும் ஒருவராகவே ஆகிறார். ஷெய்குஷ ஹாபுத்தீன் சுஹ்ரவர்த்தி அவர்களுடைய ' அவாரி புல்மஆரிபு ' என்னும் கிதாபில், ஒரு கூட்டத்தவருக்கு ஒப்பாகி அவர்களுடைய நெறி முறைகளையும், நடத்தைகளையும் ஒருவர் கடைபிடித்தால் இம்மையிலும், மறுமையிலும் அவர்களைப்போன்றே அவர் ஆய்விடுகிறார் மலைக் குகையில் தூங்கிய ஏழுபேருடைய நாயும் நியாயத் தீர்ப்பு நாளில் மனித கோலத்தில்தான் எழுந்திருக்கும் ஒருவருடைய மகனான பஅலம் " 'பஅலம்'பின் ஓர் நாயுடைய கோலத்தைப் பெறுவான்.

மனிதர்களுக்கு கொடுப்பதிலன்றி அவர்களிடமிருந்து பறித்துக்கொள்வதில் தைரியம் ' என்பது இல்லை 'அல்லாஹ்' வின் நண்பர்களுக்கு காட்டப்படும் வெளியரங்க மரியாதை 'அல்லாஹ்'வுக்கே அந்தரங்கத்தில் காட்டப்படும் மரியாதை யாகும் என்று அப்துல் ஹாபிஸ் கூறுகிறார்கள்.

' குல்லுஷையின் ஹாலிகுன்இல்லா வஜ்ஹஹு ' அவனுடைய ' முகம் ' நீங்களாக ' கைர் ' ஆகிய ஒவ்வொரு வஸ்தும் நாசத்தையுடையதேயாம் ' கஷ்பு ' டையவர்கள் அந்த ' இன்மை ' யை இம்மையிலேயே பார்க்கிறார்கள் திரையிடப்பட்டவர்களோ அதனை மறுமையில் வாக்களிக்கப் பட்டிருக்கிறார்கள். (கடந்த, நிகழ், வரும்) காலத்தினவாகிய எதும் முக்காலத்தும் இன்மையாயிருப்பதால் இன்மையாக்கபட வேண்டிய அவசியத்தைப் பெறுவதன்று இந்த பிரபஞ்சத்தின் இன்மை முக்காலத்தும் தரிபாட்டுடனிருக்கும் 'ஹக்கு'டனே

ஒப்பிடப்படுகிறதன்றி எதுமில்லை. பூர்விகமாயும் சதா காலமும் நீடிப்பவனாயும் 'ஹக்கு' இருக்க வஸ்துக்கள் அந்த அம்சங்களைப் பெறுவதில்லை. 'ஹக்கு' இன்றிய யாவும் 'மித்தை' யாகிய பொய்யும், இன்மையுமாம் 'மும்கின்' ஆகிய இடம்பாடுடையது எப்பொழுதும் இன்மையின் அஸ்திவாரத்தையே பெற்றிருக்கின்றது. "யுக்ரிஜுல்ஹைய மினல் மையிதீவயுக்ரிஜுல்மை யிதுமினல்ஹையி "

அவன் மரணித்தவற்றை உயிர்ப்பிக்கிறான்; உயிர் பெற்றவற்றை மாணிக்கச் செய்கிறான். அதாவது :

1) பார்வைக்கு மரித்துவிட்டதாக தோன்றும் இறந்த சிறுமியினின்றும் அவன் உயிர்ப்பிக்கிறான். ஜீவிப்புடனிருக்கும். மனிதனை இறந்த மனிதனைச் செய்கிறான்.

2) அவன் மூடன் ஒருவனை விவேகியாகச் செய்கிறான். விவேகியை மடையனாகுகின்றான்.

3) 'பனா' வினின்று 'பகா' அளிக்கிறான்; 'பகா'வினின்றும் 'பனா'வைக் கொடுக்கிறான்.

4) அகண்ட பரிபூர்ணத்திலிருந்து கண்டத்தைக் கொணர்கிறான். கண்டத்தினின்றும் அகண்டத்தை அளிக்கிறான்.

5) 'அஸ்மா இலாஹி' யிலிருந்து 'அஸ்மாகியானி' யையும், 'அஸ்மாகியானி' யிலிருந்து அஸ்மா இலாஹியையும் கொண்டு வருகிறான்.

சம்பூர்ணம் !

அல்ஹம்துலில்லாஹ்!

ஏழு நிலைகள் - மகாம்கள் - நப்ஸுகள் - எல்லைகள் - அல்லது ஞான பூமிகளின் விபரம்

1. நப்ஸ் அம்மாரு:—

(மகாமே நாசூத்து—மூலாதாரச் சக்கரம்—ஜாக்கிரம் - Gonads Clands)

இந்நிலையில் இருப்பவர்கள் புலனுறுதிகளின் புசிப்புக்காக தன்னையே அர்ப்பணித்தவர்கள் நன்மை, தீமை இன்னது என்று புரியாமலே பஞ்ச மகாபாதகங்கள் அனைத்திலும் ஈடுபடும் தன்மை உள்ளவர்கள். இந்நிலையில் இருப்பவர்களுடைய விமோசனம் சரீஅத்தின் சட்டதிட்டங்களைக் கண்டிப்பாக கடைபிடிப்பதுதான் கடைபிடித்தால் நப்ஸ் லவ்வாமாவின் நிலையை அடையப் பெறுவர். இந்த தானத்தில் அல்லாவுடைய 'ஹாலிகு' (படைக்கிறவன்). 'முளில்லு' (வழி கெடுப்பவன் அல்லது மிருக குணம் உள்ளவன்) என்ற இரு இஸ்முகளும் இந்த மகாமுடன் இணைந்து செயல்படுகின்றன.

2 நப்ஸ் லவ்வாமா :—

(மகாமே மலக்கூத்து - சுவாதிஸ்தானச் சக்கரம்— சொப்பனம்—Adrenals Glands)

இந்த நிலையில் நன்மை எது? தீமை எது? என உணர முடியும். இந்நிலையில் உள்ளவர்கள் தீமையில் ஈடுபடும் பொழுது தன்னை நிந்தித்தாலும் அதிகமாய் தீமையின் பக்கமே சாடும் தன்மையுள்ளவர்கள், கெட்ட பண்புகளை புறக்கணித்து

நல்ல பண்புகளை மேற்கொண்டு தெய்வ பக்தியுடன் நன்மையே செய்து நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைப்படி (தரீகத்தின் படி) நடந்து வந்தால் ஜபருத்து என்ற பதவியை அடைய முடியும். இந்த பூமியில் 'கவிய்யுன்' (சக்தி வாய்ந்தவன் [மலக்கு], 'லத்தீபு' (உன்னித்து கவனிப்பவன் [ஜின்] என்ற இரு இஸ்முகளும் இணைந்து செயல்படுகின்றன.

3. நப்ஸ் முல்ஹிமா:—

(மகாமே ஜபருத்து—மணிப்பூரகச் சக்கரம் — சுளுத்தி — Pancreas Glands)

இந்நிலைக்கு வந்தவர்கள் முக்கால் பாகம் நன்மையிலும், கால்பாகம் தீமையிலும் ஈடுபடும் தன்மையுள்ளவர்கள். இவர்கள் மிகுதமாக ஜெபதபங்களில் ஈடுபட்டால் மகாமே லாஹூத்து என்ற பதவியை அடையப் பெறுவர். இந்த மகாமுடன் (1) 'காபிலு' (சுருங்கச் செய்வது) என்ற இஸ்மும் (கோலம் - நெருப்பு), (2) 'ஹைய்யு' (உயிரூட்டுவது) என்ற இஸ்மும் (கோலம் — காற்று), (3) 'முஹ்யியி' (சுறுசுறுப்பூட்டுவது) என்ற இஸ்மும் (கோலம் — தண்ணீர்). (4) 'முமீய்த்து' (அழிப்பது) என்ற இஸ்மும் (கோலம் — மண்). (5) 'அலீலு' (பெருமதிப்புள்ளது) என்ற இஸ்மும் (கோலம் — உலோகங்கள்) (6) 'ரஸ்ஸாக்கு' (அன்னமளிப்பவன்) என்ற இஸ்மும் (கோலம் - உணவுப் பொருட்கள்) இணைந்து செயல்படுகின்றன.

4. நப்ஸ் முத்மஇன்னா.—

(மகாமே லாஹூத்து — அனஹதாச் சக்கரம்—துரியம்— THYMUS GLANDS)

இந்நிலையை அடைந்தவர்கள் நன்மையைத் தவிர

ஏழு நிலைகள்-மகாம்கள்-நப்ஸுகள்-எல்லைகள்-அல்லது ஞானபூமிகளின் விபரம்

நிலைமையைத் தெரியாதவர்கள். இவர்களுடைய மனம் சதாவும் ஆண்டவனையே தியானித்துக் கொண்டு இருக்கும். நான் என்பது அற்றுப் போன இடம். விலாயத்து உதயமாகும் இடம். இவர்கள் சதாவும் மௌனமாய் இருந்து ஆண்டவனை தியானித்து வந்து 'மகாமே ஹாஹூத்து' என்னும் பதவியை அடையப் பெறுவர். இந்த மகாமுடன் (1) 'முஹ்சிய்' (இல் ஹாம் என்னும் தெய்வீக உதிப்பை பதிவு செய்வது) என்ற இஸ்மும் (கோலம்—புதன்), (2) 'முஹைமினு' (ரக்ஷகன்) என்ற இஸ்மும் (கோலம்—சந்திரன்) இணைந்து செயல்படுகின்றன.

5. நப்ஸ் ராளியா:—

(மகாமே ஹாஹூத்து —விசுத்தாச் சக்கரம்—துரியாதீதம்—THYROID GLANDS)

இந்நிலையை அடைந்தவர்கள் நான்காவது பதவியின் பூரணத்துவத்தை அடையப் பெற்று பேரின்ப நிலையை அடைந்தவர்கள். "இன்னல்லாஹாஹூவல் வலிய்யு' என்ற திருவசனத்தின்படி விலாயத்தை சம்பூர்ணமாகப் பெற்றவர்கள் இந்த மகாமுடன் 'முஸவ்விரு' (வடிவம் தீட்டுபவன்; தேகாதி குணங்களையும் அடிமைத்தனத்தையும் வெட்டி நீக்குபவன்) என்ற இஸ்மு இணைந்து செயல்படுகின்றது. இதன் கோலம் சுக்கிரன்.

அஸ்ராரே அனல்ஹக்

6, நப்ஸ் மர்ளியா:—

(மகாமே பாஹூத்து—அஜ்ஞ சக்கரம்—அதீதம்—
PITUITARY CLANDS)

தெய்வத்துடன் தொடர்பு கொள்ளும் நிலை இல்ஹாம் என்னும் தெய்வ உதிப்பைப் பெறுவதும், தெய்வ வசனங்கள் கிடைக்கப் பெறுவதும் இந்நிலையில்தான். நுபுவ்வத்தின் எல்லை. இந்நிலைக்கு அதீதம் என்றும், ஆருவது எல்லை என்றும், இதற்குமேல் ஒன்றுமில்லையென்றும் சில மகான்கள் கூறுகிறார்கள். இந்த மகாமுடன் (1) 'ரப்பு' (போஷிப்பவன்—சத்துவப்பொருளை சடப்பொருளாய் மாற்றுந் தன்மை) என்ற இஸ்மும் (கோலம் - சனி), (2) 'அலிமுன்' (வஸ்து அடங்களிலும் அறிவு மயமாய் வியாபித்திருப்பது என்ற இஸ்மும் (கோலம் வியாழன்). (3) 'காஹிரு' (சர்வத்தையும் அடக்கி ஆளுந் தன்மை) என்ற இஸ்மும் (கோலம் - செவ்வாய்) (4) 'நூரு' (பிரகாஸம்) என்ற இஸ்மும் {(கோலம் - சூரியன்) இணைந்து செயல்படுகின்றன.

7. நப்ஸ் காமிலா :—

மகாமே ஐப்ஹூத்து — சகஸ்ரராச் சக்கரம் —
PINEAL GLANDS)

தெய்வம் தானாய் இருக்கும் நிலை. நுபுவ்வத்தின் சம்பூர்ண நிலை. குதுபியத்தின் உதயம். இந்த நிலையை அடைந்தவர்களிடமே முழு உலகத்தினுடைய அந்தரங்க ஆட்சி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆளுநர்க்கு 'குத்புல் அக்தாப்' என்று பெயர் இந்நிலையில் இருப்பவர்கள் தற்போதம் இழந்து, உஷாரற்ற நிலையில் இருப்பதனால் இவர்

களுக்கு 'ஹாஹூன்கள்' என்று பெயர். 'மக்அது ஸித்கு' உண்மை குடிகொள்ளும் தானம் என்று பெயர், இந்த மகாமுடன் அல்லாஹ்வுடைய 'ஷகூரு' (ஒன்றுக்கு பன்மடங்கு அருள்பாலிப்பவன்) என்ற இஸ்மும், (2) 'கனிய்யு' (சர்வ சுதந்திரமானவன்; வஸ்து அடங்கலையும் தன்னில் காணும்நிலை) என்ற இஸ்மும், 'முக்கதிர்' (வஸ்து அடங்கலின் மீதும் தன் செல்வாக்கை செலுத்தும் தன்மை) என்ற இஸ்மும் இணைந்து செயல்படுகின்றன. கோலங்கள் வெளியாகும் தானமும் இதுவே.

அச்சிட்டோர் :
அஸ்ஸிமா பிரிண்டர்ஸ், கண்ணம்மன் கோவில் தெரு,
திருநெல்வேலி-627 001.

எழு நிலைகள் விபரம்


7 SAHASRARA
6 AJNA
5 VISHUDDHA
4 ANAHATA
3 MANIPURA
2 SVADHISTHANA
1 MULADHARA

پیران پیر دستگیر